SUPPLEMENT TO THE "CATHCLIC GUARDIAN"

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "GUARDIAN" JAFFNA.

Telephone: No. 100

# சத்திய வேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

74-ம் புத்தகம் 41-ம் இல. யாழ்ப்பாணம் 1949-ம் ஆண்டு ஐப்பசி மாசம் 20-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## மிஷன் ஞாயிறு நிருபம்

### மகா வந். தூத்துக்குடி மேற்றிராணியார்

யேசுவின் திருஇருதயத்தினிடம் நமக்கு மிகவும்பிரியமுள்ள சகோதரர்களே! பிள்ளைகளே!!

இம்மாதம் 23-ந்திகதி மிஷன் ஞாயிறு அல்லது விசுவாசப்பரப்புதல்ஞாயிறு. பிரதிவருடமும் ஐப்பசிமாதக் கடைசி ஞாயிறு வாரம் கிறீஸ்து இராசாவின் திருநாளாகவும், அதற்குமுந்தின ஞாயிறு மிஷன்ஞாயிறுவாரமாகவும் உலகமெங்கும் கொண்டாட வேணுமென்று ஆக்கியாபித்தவர் மிஷன் நாடுகளின் பாப்பரசர்என்றுபுகழ்பெற்ற காலஞ்சென்ற பரிசுத்தபிதா 11-ம் பத்திநாத பாப்பரசரே.

இந்நாள் அகிலகத்தோலிக்க உலகமெங்கும் வெகுவிமரிசையுடன் கொண்டாடப்படுகிறது. அதிவண. இக்னேஷஸ்சாமாசுவாமிகள் இந்தியா, இலங்கை, பர்மா தேசங்களின் விசுவாசப்பரப்புதல் சபைத் தலைவராக நியமனம் பெற்றநாள்தொடங்கி இச்சபையானது வெகுவாய் முன்னேற்றம் பெற்றிருப்பது மகாபுகழ்ச்சிக்குரிய காரியமே. எத்தால் வாழலாம், ஒத்தால்வாழலாம்; பலதுளி பெருவெள்ளம் என்பதற்கொப்ப இந்தவிசுவாசப்பரப்புதல் ஞாயிறுவிழாவானது ஆண், பெண், சிறுவர், பெரியோர், தனவந்தர், தரித்திரர், குருமார், கன்னியர் எல்லோரும்சேர்ந்து ஒத்துழைத்தால் ஏராளமான நன்மைபயக்கும் என்பதற்குச்சந்தேகமில்லை. இம்மேற்றிராசனத்தில் அநேகஇடங்களில் இந்நாள் மிக்கவிமரிசையுடன் நடைபெறுகிறதற்குக்காரணம் வண. பங்குச்சுவாமிமார்களின் விடாமுயற்சியே.

#### செய்ய வேண்டியதென்ன?

#### முதலாவது உருக்கமான செபம்

உம்முடைய இராச்சியம் வருக. கிறீஸ்து இராசா வாழ்கஎன்பது விருதுவாக்கியம். இதற்காகச் செப அப்போஸ்தலசபையில் சேர்ந்த நாம்செய்யும் சகலகிரிகைகளையும் யேசுவின் திருஇருதயத்தின் கருத்துக்காக மரியாயின்மாசற்ற இருதயத்தின்வழியாக ஒப்புக்கொடுக்கவேண்டும். அன்றுஎல்லோரும் பூசைகண்டு, நன்மைவாங்கி, செபமாலைசெபித்து, விசுவாசப்பரப்புதலுக்காகச் சொல்லும்செபத்தைப் பக்தியுடன் சொல்லக்கடவார்கள்.

#### 2-வது வேளாண்மைக்கு வேண்டிய ஆட்கள்

நமதுநாட்டில் குருமார், கன்னியர், சந்நியாசிமார் தொகை மிகக்குறைவு. குருமார் குறைவாயிருக்கிறபடியால் அநேக ஊர்களில் ஞாயிற்றுக்கிழமை, கடன் திருநாட்களில் பூசையில்லை. நமது பள்ளிக்கூடங்களுக்குக் கன்னியர்களும், விரத்தர்மார்களும் முன்னையைப்பார்க்கிலும் இக்காலத்தில் அதிகம்தேவை. "அறுப்புமிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்பேர். ஆகையால்தான் அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அறுப்புக்குளசமானை மன்றாடுங்கள்."

#### 3-வது பொருள் உதவி

விசுவாசப்பரப்புதல்சபையார் சேர்க்கிற பணமெல்லாம் ரோமாபுரிக்கு அனுப்பப்படுகிறது. இந்தப்பெரிய தொகையிலிருந்து மிஷன் நாடுகளிலுள்ள ஒவ்வொரு மேற்றிராசனத்துக்கும் வருடந்தோறும் ஏராளமான பணஉதவி கிடைக்கிறது.

பணம்சேகரிக்கிறதற்குச் சுளுவான வழியென்ன? கூடுமானவர்கள் எல்லோரும் விசுவாசப்பரப்புதல்சபையில் சேரவேண்டும். மாதம் இரண்டுஅணா. வருஷத்திற்கு 1 ரூபா 8 அணா.

மிஷன்ஞாயிறன்று நமதுமேற்றிராசனத்தில் அநேக உற்சாகமுள்ள குருமார் தங்கள் களைப்பைத் தவிர்ப்பைப் பார்க்காமல் வீடுவீடாகச்சென்று விசுவாசப்பரப்புதலுக்காகத் தர்மம்கேட்கப் போகிறார்கள். அவர்களுக்குப்பதிலாகச் சில இடங்களில் உபதேசிமார்களோ, உபாத்திமார்களோ போகிறார்கள். இவர்கள்வந்தால் ஒப்பாசாரத்துக்காகக் கால்அணா, அரைஅணாகொடுக்காமல் தங்கள் தங்கள் அந்தஸ்துக்கு ஏற்றாப்போல் நல்லமனதுடனும், தாராளகுணத்துடனும், முகமலர்ச்சியுடனும் கொடுக்கவும். பணம்காசுகொடுக்கக்கூடாதவர்கள் தவசதானியம் கொடுக்கலாம்.

ஒவ்வொருபங்கிலும் சேர்க்கப்பட்டதொகையைக் கார்த்திகை மாதம் 15-ந்திகதிக்குள் [illegible] ராசன [illegible] அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இரக்கம்நிறைந்த யேசுவின் திருஇருதயமும், மரியாயின்மாசற்ற இருதயமும், நல்லதந்தை அர்ச். சூசையப்பரும், மிஷன் நாடுகளுக்கு விசேஷபாதுகாவலர்களான அர்ச். சவேரியார், குழந்தையேசு தெரேசம்மாளும் உங்கள் அனைவரையும் சம்பூரணமாய் ஆசீர்வதிப்பார்களாக.

✠ கபிரியேல் பிரான்சிஸ்
திபூர்சியுஸ் ரோச், சே. ச.,

## அறுத்தெறிந்த அருள்மாலை

[ஆசிரியர் ஏ. செபஸ்தியன் தூஸ், தலைமன்னார்]

அன்றிரவு ஒன்பதுமணி. எங்கும் ஒரேநிசப்தம். யாவரது இல்லங்களிலும் அமைதி குடிகொண்டிருந்தது. இளம்பிறைச் சந்திரன்கூட உலகின்நிலையை எட்டிப்பார்த்துவிட்டு அமைதியைவேண்டிக் கடலுள்மூழ்கிவிட்டது. ஞானம்மாளின் மனதில் மட்டும் புயற்காற்றுவீசிக்கொண்டிருந்தது. தனதுசிறியவீட்டில் ஒருசிறு விளக்குவெளிச்சத்தின் முன்னால் இருந்துகொண்டு தனதுசிறியகுழந்தையை மடிமீதும், மூத்தகுழந்தை சுசீலாவைத் தன்னருகிலும்வைத்துத் தாலாட்டி நித்திராதேவியை ஆட்கொள்ளும்படி வேண்டிக்கொண்டிருந்தாள். அவளது கண்ணுங்கருத்தும்அவர்எப்போ வருவாரென்று ஏங்கியபடி வாயிலைநோக்கிக்கொண்டிருந்தன.

பெண்தன்மையும், தெய்வபக்தியும் ஒருங்கேயமையப்பெற்ற ஞானம்மாள் அன்றுமுழுவதும் வீட்டின் அலுவல்களையும், பிள்ளைகளின் தொந்தரவுகளையும் அனுபவித்துக்கொண்டிருந்ததால் அலுப்படைந்திருந்தாள். விளையாடிக் களைப்புடன்வந்த சுசீலாவை ஞானம்மாள் நித்திரைசெய்விப்பதற்குத்தான் எவ்வளவுசிரமப்படவேண்டிவந்தது. "பசிக்கிறது சோறுதாம்மா" என்று கேட்டுப் பிடிவாதமாக அழுதாள்சுசீலா. ஆனால், சோறு இருந்தாற்தானே. "சோறு சமைக்கவில்லைச் சுசீலா; நீ படுத்து நித்திரைசெய்; அப்பா இப்போவந்துவிடுவார். அப்பாவிடம்காசுவாங்கி நான்உனக்குப் பாண்வாங்கித் தருகிறேன்" என்றுஆதரவாகப் பலமுறை கூறி ஒருவாறு நித்திரைக்குப் போட்டாள் ஞானம்மாள்.

பசிக்கொடுமையால் தேம்பித்தேம்பியழுதபடி நித்திரைசெய்யும்சுசீலாவின் அழகியமுகத்தை ஞானம்மாள் காணும்போது அவள்மனதிற் பலவிதஎண்ணங்கள் அலைகள்போல் கொந்தளித்து எழுந்தன. "ஓரளவு செல்வந்தராக இருந்தநாம் இப்போது கையில் ஒருசதங்கூட இன்றிப் பிள்ளைகளும் பட்டினிகிடக்கும் நிலைமையாச்சுதே. இதற்கெல்லாங்காரணம் அவர்தானே" என்று நினைக்கும்போது அவளையறியாமல் அவள் கண்கள் நீர்த்திரைதோன்றி வட்டமிட்டது. பசிக்கொடுமைசகிக்கமாட்டாமல் அவள்உடல்கூட நடுக்கங்கொண்டது. ஈற்றில் யாவருக்கும் எப்போதும் ஆதரவளிக்கும் அரியசெபமாலையைத் தன்கையில்எடுத்தாள். தன் சிறியகுழந்தையைச் சுசீலாவுக்ருகில் வளர்த்திவிட்டுத் தான் தப்பாதஅடைக்கலமாகஎண்ணி மதித்துவந்த பரிசுத்தமருதமடுத்தாயாரின் படத்தின்முன்சென்று தூபமேற்றி மீதியாயிருந்த கட்டைமெழுகுதிரியையுங் கொளுத்திவைத்து வழமைபோலச் செபமாலையைப் பக்தியோடுசெபித்துக்கொண்டிருந்தாள்.

மூன்றுகாரணிக்கங்கள் செபித்திருப்பாள், யாரோதடால்என்று கதவைத்திறந்த சத்தங்கேட்டது. அடுத்தகணம் கதவுநிலையில் கணீர்என்று ஒருமுட்டு வாங்கியபடி தடவிக்கொண்டு வந்து சன்னதமாடினன் இவள் எதிர்பார்த்த கணவன் பெனடிக்ற். கள்ளுமணம் குப்பென்று வீசியது. ஞானம்மாளின்மனம் வேகமாக அடித்துக்கொண்டது. திரும்பிப்பார்த்தாள். இவ்விஷயங்களை அவள் எத்தனையோ தடவைகளிற் கண்டு அனுபவம் அடைந்திருந்தாள். ஆனபடியால் மறுவார்த்தையின்றித் தன்செபமாலையிலேயே கவனத்தைச்செலுத்த முனைந்தாள். கால்கள் தள்ளாடத்தள்ளாட அவன்குறுக்கும் நெடுக்குமாக அவ்வீட்டுக்குள் இரண்டுமுறை உலாத்துப்போட்டான். அதின்பின் அவனதுதளர்ந்தகால்கள் அவனை அவ்வீட்டின்மூலைக்குக்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சினிமா நடிகரும் குடும்பசெபமாலையும்

தமக்குண்டான சங்கீதத்திறமையாலும், சினிமாவில் நடிக்கும்திறமையினாலும் உலகப்பிரசித்திபெற்றவரான திரு. பிங் குரொஸ்பி அவர்கள் சமீபத்திலே அமெரிக்க பெற்றோர்தினவிழா வன்று ரேடியோவில் முன்னில்லாத ஓர் நவீனமுறையில் பேசலாயினர். இம்முறை அவர் ஓர் கணவரும், நான்குபுதல்வர்களின் தந்தையுமென்ற மட்டில் பேசத்தொடங்கி, கத்தோலிக்க தாய்தந்தையர்சகலரும் தங்கள் வீட்டிலே தங்கள் பிள்ளைகளுடன் தினமும் செபமாலை செபித்துவர வேண்டுமென்று அவர்களைத் தூண்டிவிடலாயினர். அவர் ஹொலிவூட்டிலிருந்து இப்படியெல்லாம் பேசியது எவருக்குமே மிகுந்தகரிசனையை உண்டுபண்ணுவதாயிற்று. அவர் பேசியதில் குறிப்பிட்டது வருமாறு:

"ஓர் தகப்பன் என்றமட்டிலே பேசுவதற்கு அமெரிக்க இல்லங்களில் ஓர் விருந்தாடியாக என்னை ஏற்றுக்கொள்ள வேண்டும். எங்கெங்குமுள்ள பெற்றோரைப்போலவே நேர்மையானசமாதானத்தை ஆசிக்கும் உலகத்தில் எனது பிள்ளைகள் நேர்மையானவர்களும், பிரயோசனமான நகர்வாசிகளுமாய் இருக்கவேண்டுமென ஆசிக்கிறேன். எனது பிள்ளைகள் செபஞ் செய்யவேண்டுமென நான் ஆசிக்கிறேன். ஏனெனில், செபத்தின் ஆழமும், எதையுமே அசைத்துவிடுவதுமான வல்லபத்தை நான் அறிவேன். குருமாரில் ஒருவரென்ற மட்டில் அல்ல, ஆனால் உங்களைப்போன்று மற்றோர் தகப்பனும், மற்றோர்பெற்றோருமென்றமட்டிலே நான் அந்த வல்லபத்தைஅறிவேன். எங்கள் கோவிலிற்போன்று எங்கள் இல்லத்திலும் எனது பிள்ளைகள் செபஞ்செய்ய வேண்டுமென ஆசிக்கிறேன். ஆதாவது குடும்பசெபமாலையின் உண்மையின வல்லமையில் அவர்கள் நம்பிக்கைகொள்ளவேண்டுமென்று ஏன் நான் ஆசிக்கிறேன். நமது இல்லத்திலே நன்மைக்காகவும், தீமையைஎதிர்த்தும் வேலைசெய்கிற பொன்னம்பெரியதோர் பலமென்பதாகக் குடும்பசெபமாலையில் நாம் நம்பிக்கை கொண்டிருக்கின்றோம். நிரந்தரமான சமாதானத்தின் கட்டுக்கோப்பை நாம் உருப்படுத்த வேண்டுமானால் நன்மைக்கேதுவான இன்றியமையாத இந்த முக்கிய பலத்திலே முன்னர் எக்காலத்திலும் பார்க்க இன்று நாம் நம்பிக்கைகொள்ளுகின்றோம். கத்தோலிக்கர் என்றமட்டிலே குடும்பசெபமாலை பூரணமான ஓர்குடும்பசெபமாய் இருப்பதாக நாம் நம்புகிறோம்"

### பாப்பரசருக்கு அனுப்பப்படும் தபால்கள்

பரிசுத்த பாப்பரசருக்கென்று நேரேவிலாசமிடப்பெற்ற இரண்டு அந்தர்நிறையுள்ள கடிதங்கள் வத்திக்கான் மாளிகையின் மூன்றாவது மேல்மாடியிலுள்ள அவரது பிரத்தியேக அறைகளிலே தினமும் கொண்டுபோய்க் கொடுக்கப்படுகின்றன. வத்திக்கான் இராச்சிய தபாற்கந்தோர் அதிகாரிகள் பிறவிடங்களிலிருந்து தினமானம்வந்துகொண்டிருக்கும் ஒரு தொன்நிறையான கடிதங்களை வழங்கிவருகின்றார்கள். இவற்றில் பத்திலொருபங்கும் பாப்பரசருக்கே அனுப்பப்படுகின்றன. மூன்று தொன்நிறையான தபால்கள் தினமும் வத்திக்கானிலிருந்து பிறவிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. அங்ஙனம் வெளியே அனுப்பப்படும் தபால்களில் குறைந்தபட்சம் நூற்றுக்கு 70 விகிதமான கடிதங்களும், போஸ்ற்காட்டுகளும் தங்கள் இனசனருக்குப் பாப்பரசின் முத்திரை குத்திவத்திக்கான் தபாற்கந்தோர்மூலம் ஓர்கடிதமோ அன்றேல் ஓர்போஸ்ற்காட்டோ அனுப்பிவைக்க வேண்டுமென ஆசிக்கின்ற யாத்திரிகராலும், உல்லாசப் பிரயாணிகளாலும் அனுப்பப்படுவதாய் மதிப்பிடப்பட்டிருக்கிறது. சம்பேதுருவானவர் மகாஆலய கூரைப்படலத்தின் மீது தானும் ஓர் தபாற்கந்தோர் இருக்கின்றது. உலகின் மகாப்பிரமாண்டமான 'டோம்' எனப்பெயரிய அந்தவில்மச்சுமாடத்தின்மேல் தரிசகர்கள் நின்று, கீழேறோமாபுரிக்குமேலாகப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே 'அச்சிறிய தபாற்கந்தோரிலிருந்து தங்கள் வீடுகளுக்குப் போஸ்ற்காட்டுகளை எழுதக்கூடியோராய்இருக்கின்றார்கள். தமக்கு அனுப்பப்படுகின்ற இருஅந்தர் தபால்களுடன் பாப்பரசர் தினமும் வத்திக்கான் இராச்சியவாயிலிலே கையால் நேரேகொடுக்கப்படுகின்ற நூற்றுக்கணக்கான கடிதங்களையும், விண்ணப்பங்களையும் பெற்றுவருகின்றார்.

## கற்பலங்காரியின் கடமைகள்

[ ச. தே. ஞானப்பிரகாசம், பாலக்கரை, திருச்சி ]

( நோண்டிச்சிந்து மெட்டு )

1. கற்புமங்கை மார்கள் பெருமை—தேடிக்
   காணவேணு மென்றால் உலகத்தில்அருமை
   அற்புதமாய் அவர் மகிமை—நீதி
   அச்சுதனும் கண்டுபுகழ் மெச்சும்புதுமை

2. பெற்றவரின் பாதம் போற்றுவார்—கல்வி
   பேணுவார் தந்தைதாயார் ஆணைஆற்றுவார்
   சுற்றம்உரை முற்றும் மதிப்பார்—தன்னைத்
   தொட்டுத்தாலி கட்டியோரை நித்தம்துதிப்பார்

3. காலையில்நீ ராடவும் செய்வார்—நல்ல
   கந்தகலவைகள்பூசிச் சுந்தரம்செய்வார்
   சேலைசுத்த மாகக் கட்டுவார்—கணவன்
   சேவடியைப் பூசைசெய்து பூவைக் கொட்டுவார்

4. மூப்பும்அவர் காப்பில் விழுவார்—நாதன்
   முன்னுறங்கப் பின்னுறங்கி முன்னேஎழுவார்
   பூப்பில்முகம் வேறு காட்டுவார்—நான்கில் [டுவார்
   போய்க்குளிப்பார் தீண்டல்துணி தோய்த்துமாட்

5. ஆண்டிபர தேசிக் கிடுவார்—வீட்டில்
   அன்னமென்று வந்தவர்க்கு முன்னமிடுவார்
   தாண்டிஅயல் வீடு சென்றிடார்—நாதன்
   தன்னில்லமில் லாதவேளை பொன்னெனிதொடார்

6. உண்டவுடன் மீதியை உண்பார்—நாதன்
   உட்காரென்று சொல்லும்வரை நிற்கவேசெய்வார்
   கொண்ட கோபம் கண்டு வெறுக்கார்—மனம்
   கோணலின்றி சொற்படிஎந் நாளும்மறுக்கார்

7. மக்கள்வேலை பலவும் செய்வார்—கணவன்
   வரவுக்குத் தக்கபடி செலவும்செய்வார்
   தக்கவித உண்டி சமைப்பார்—நாளும்
   சாந்தமுடனே உணவை ஈந்துஅமைப்பார்

8. மாமன்மாமி தன்னைப் பணிவார்—வீட்டில்
   வந்தஇன பந்துக்களைச் சிந்தைஅணிவார்
   தீமைச்செயல் ஒன்றும் புரியார்—தங்கள்
   சீவன்போக நேரினும்பொய் நாவில்உரையார்

9. எத்தனையோ தர்மங்களுண்டு—அவைகளை
   ஏற்கவென்றால் பெரியோர்கள் வாக்கிலேயுண்டு
   சுத்தமாய்த் தெரிந்ததைச் சொன்னேன்—யானும்
   சொன்னபடியேநடக்க இன்னமும்சொன்னேன்

10. கேட்டுக்கேட்டுக் கேட்டு வரலாம்—பயனென்?
    கேட்டவண்ணமே நடந்தால் மாட்சிபெறலாம்
    நாட்டமுறும் நல்ல நங்கையே—ஞானம்
    நாடிச்சொன்னேன் கற்புமங்கை பாடிஇங்கேயே.

(ச. போ.)

### மதுபானஉற்பத்தி விலக்கு

கற்றுடாவைச்சேர்ந்த ஆனைப்பந்தியிலே பிரதமர் டி. எஸ். சேனநாயக அவர்களுக்குப் படித்துக்கொடுக்கப்பட்ட வரவேற்புப்பத்திரத்தில்செய்யப்பெற்ற இருமனுக்களில், நாட்டிலே மதுபானம் உற்பத்திசெய்வதை விலக்கிவிடவேண்டுமென்பதும் ஒன்றாகும். இதற்குப்பிரதமர் அளித்தபதில் வருமாறு: இங்கு மதுபானஉற்பத்தியை நீக்கிவிடவேண்டுமென்பதற்குச் சார்பாகவே நான்என்றைக்கும் இருந்துவருகிறேன். இலங்கைமக்களுக்கு மதுபானம்செய்துகொண்டுவருகின்ற பெருந்தீமையை நான் அறிந்துள்ளேன். எனதுசிறுபராயமுதலே மதுபானநீக்கத்துக்காகப் போராடியிருக்கிறேன். இந்தப்போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த இன்னுமே ஆயத்தமாயிருக்கிறேன். ஆனால் சட்டமூலமாக மதுபானத்தைநீக்குவதற்குமுன் மக்களிடையே மனமாற்றமும் ஏற்படவேண்டும். மதுபானத்தை விரும்பும்மக்கள் இருக்கிறவரையில் சட்டமூலமாக அதை நீக்கமுயற்சிப்பதில் பலனில்லை.

❀ இந்திய கம்யூனிஸ்தகட்சி மீது இந்திய அரசாங்கம்சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகள் அடங்கியதும், இந்திய உள்நாட்டு மந்திரிகாரியாலயம் வெளியிட்டிருப்பதுமான அறிக்கையைப் பிரித்தானியதேசபத்திரிகைகள்சென்ற 2-ந்திகதி விசேஷ முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருக்கின்றன.

**தோமஸ்:**—நண்பனே! நீ சாராயம் குடிக்குமுன் உனது கண்களை ஏன் இறுக மூடிக்கொள்ளுகின்றாய்?

**டேனிஸ்:**—ஏன், தண்ணீரைவிட மஸ்தானபொருள் எதையும் கண்கொண்டு பார்க்கப்படாதென்று டக்றர் சொல்லியிருக்கிறாரென்பது உனக்குத் தெரியாதா?

* * *

**சிநேகிதர்:**—உமக்கு ஒருமகன் பிறந்திருக்கிறானென்று அன்றொருநாள் சொன்னீர் அல்லவா? அவன் யாரைப்போல் இருக்கிறான்?

**தகப்பன்:**—அவனது கண்கள் சரியாய் என்னுடைய கண்களைப் போல; மூக்கு தாயின்மூக்கைப் போல; ஆனால், அவன் தன்னுடையசத்தத்தை எங்கள்மோட்டர் ஹோணிலிருந்தே பெற்றுக்கொண்டானென நினைக்கிறேன்.

* * *

**வில்லி:**—(சரித்திரப் புத்தகத்தைப் பார்த்தவண்ணம்) பப்பா! "நாங்கள் இன்னமும் சண்டையிடத் தொடங்கவில்லை" என்று சொன்னவர் யார்? சொல்லுங்கள்.

**பப்பா:**—(சிறுக யோசனைபண்ணிவிட்டு) மகனே, எனக்கு ஞாபகமாயில்லை. ஆனால், அது புதிதாக விவாகஞ்செய்த தம்பதிகளாயிருக்கலாமென நினைக்கிறேன்.

### ருஷியாவிடம் அணுக்குண்டு

"ருஷியா அணுக்குண்டு கண்டுபிடித்திருப்பதைப்பற்றி உலகத்திற்கு ஏற்பட்டிருக்கும்கவலை பிரமானதல்ல; ஆனால், வீண்பீதியால் உலகுக்கு ஏற்பட்டுள்ள மனப்பிராந்தியே அதற்குப் பெருங்கவலையை அளிக்கக்கூடியதாக இருக்கிறது" என்று இந்திய பிரதமர் பண்டிதநேரு அவர்கள் கூறுகின்றார். அவர் கூறியது வருமாறு: "ருஷியா அணுக்குண்டைக் கண்டுபிடித்திருப்பதும் யுத்தத்தின் அதிகமான அபாயங்களும், பயங்கரசம்பவங்களும் அதைத்தவிர்க்கவேண்டுமென்ற எண்ணத்தையே மக்களுக்கு உண்டுபண்ணும். என்றாலும் மக்கள் எப்பொழுதுமே காரணகாரியங்களைச் சீர்தூக்கிப் பார்ப்பதில்லை. நான் பயப்படுவது ஒரு விஷயத்தைப் பற்றித்தான். மக்களிடையே வீண்பீதியால்ஏற்பட்டுள்ள மனப்பிராந்தியைக் கண்டே நான் பயப்படுகிறேன். ருஷியா அணுக்குண்டைக் கண்டுபிடிப்பதன் காரணமாக எதிர்கால சம்பவங்களைப்பற்றி ஆழ்ந்துசிந்திக்கும் சந்தர்ப்பம் உலக மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அது காரணமாக யுத்தத்தைத் தவிர்ப்பதற்கான நிலைமைஏற்படக்கூடும். ருஷிய அணுக்குண்டுச் செய்தியைக்கேட்டு நான் அதிசயப்படவில்லை. அது முக்கியமான செய்தியென்றாலும் அப்படிப்பட்ட நிகழ்ச்சி ஏற்படவேசெய்யுமென்பது தெரிந்தவிஷயந்தான்"

### மற்றோர் ஆகாயப்பந்தையம்

இங்கிலாந்திலிருந்து நியூசிலாந்துக்குப் 14,000 மைல் தூரமான சர்வதேச ஆகாயப்பந்தையம் ஒன்றைநடத்துதற்கான திட்டங்களை லண்டன்நகரிலுள்ள றோயல் விமானக்கிளப் அதிகாரிகள் வகுத்துவருகின்றார்கள். இதற்குமுன் உலகில் எப்போதாவது இவ்வளவு நெடுந்தூரம் ஆகாயப்பந்தையம் நடைபெற்றிலது. இதில் வெற்றிபெறுவாருக்கு மூப்பதினாயிரம் பவுண் வெகுமதிவழங்கப்படும். பிரித்தானியிலே ஆகாயவிமானங்கட்டுவதில் முதன்மைவாய்ந்த டே ஹவில்லண்ட்கம்பெனி இப்பந்தையத்தில்தான் கலந்துகொள்வதாக ஏலவேதெரிவித்துவிட்டது. தற்போது விமானங்கட்டுவதில் கையாளப்பட்டுவரும் நவீன முறைகளை மேற்கொள்ளுமிடத்து அதிகம் தீவிரகதியுடைய விமானம் 14,000 மைல் பந்தையதூரத்தையும் முப்பது மணிநேரத்துள் தாண்டி வெற்றிபெறமுடியுமென்று சொல்லப்படுகிறது.

❀ பரிசுத்தவருடம் அடுத்து வருவதையிட்டுப் பாப்பரசர் காஸ்ரெல் கான்டொல்போவிலுள்ள தமது கோடைகால மாளிகையிலிருந்து அடுத்த கார்த்திகைமாத ஆரம்பத்திலே வத்திக்கானுக்குத் திரும்பவிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிழைத்திருக்க வேண்டுமானுல்!

நமதுசாப்பாட்டுக்கு நாம் என்ன செய்வது? இதுதான் இன்று நம்மை எதிர்கொண்டிருக்கும் மிகப்பெரிய பிரச்சினைஎன்கிருர் கமத்தொழில்மந்திரியார் டட்லி சேனுநாயக. அவர் மேலும்கூறுவதாவது: இந்தப்பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளுவதுதான் பெரும்பாலோருக்குக் கஷ்டமாயிருக்கிறது. அதனுல்தான் நமது தற்போதைய நிச்சயமற்றநிலையை உணர்ந்துகொள்ள அவர்களால்முடியவில்லை. யுத்தத்தின்போது போக்குவரத்துக்கஷ்டங்கள் நம்மைஎதிர்நோக்கின. அப்போது நாம் நமது உணவில்பெரும்பகுதியை இறக்குமதிசெய்துகொண்டிருந்ததால் உணவுப்பஞ்சமென்பது சுலபமாகத் தீர்த்துக் கொள்ளப்பட்டது. ஆனுல், இப்பொழுது உணவுஎன் ஒரு பிரச்சினையாக இருக்கவேண்டும்? 1939-ம்ஆண்டுக்குப்பின் உலகசனத்தொகை 20 கோடிபேருக்குமேல் அதிகரித்திருக்கிறது. தினமும்சராசரி 56,000 பேர்வீதம் சனத்தொகை அதிகரித்திருக்கிறது. ஆனுல் அதேசமயத்தில் உலகில்நெல்வேளாண்மை நடைபெறுமதேசப்பரப்பின் மொத்தவிஸ்தீரணம்குறைந்திருக்கிறது. இது 1939-ம் ஆண்டில்இருந்ததைவிட இன்றுவெகு குறைவாக இருக்கின்றது. அரிசியை உணவாகக்கொள்ளும் பகுதிகளில் தான் சனத்தொகைஅதிகமாக உயர்ந்திருக்கிறது. ஆனுல், கிடைக்கும்அரிசி தேவைக்குக் காணுதிருப்பதினுல்தான் அரிசியின்விலை அதிகமாக உயருகிறது.

நமதுதேசியவருமானம் 200 கோடி ரூபாதானும்இல்லை. ஆனுல்ஒவ்வொரு வருடமும் 50 கோடிரூபா மதிப்புள்ள உணவுப்பொருட்களை நாம் இறக்குமதி செய்துகொண்டிருக்கிறோம். இந்தப் பணத்தைமட்டும் நாம்மிச்சப்படுத்தி பந்திரசாதனங்களை இறக்குமதிசெய்வதற்குச்செலவிடமுடியுமென்ருல் நமது தேசியவருமானம்பெருகி நமதுநாடு எவ்வளவு செல்வம்கொழிக்கும் ஒரு நாடாகவிருக்கும். நமதுஉடனடியான தேவையென்னவென்ருல், நமக்கு வேண்டியஉணவை நாமேஉற்பத்தி செய்யவேண்டும். இப்படிச்செய்தால் நமதுஉணவுப்பிரச்சினையை நாம்தீர்த்துக்கொள்வதோடு உலகஉணவுப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் நம்மாலான உதவியைச் செய்யமுடியும்.

இலங்கையில்மொத்தம் 9,12,500 ஏக்கர்நன்செய்நிலத்தில் நெல்வேளாண்மை செய்யப்படுவதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்நிலங்களிலிருந்து வருடம் சுமார் 170 லட்சம்புசல் நெல் கிடைக்கிறது. ஆனுல், நமதுதற்போதைய சனத்தொகைக்கு உணவளிப்பதென்ருல் 480 லட்சம் புயலுக்குமேல் வேணடும். இப்பொழுதுநாம் இதில் மூன்றில்ஒருபங்கை மட்டுமே உற்பத்தி செய்கிறோம். நமதுசனத்தொகை வருடம் 2 லட்சம்பேர்வீதம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இந்த அதிகப்படியான சனங்களுக்குஉணவளிக்க நமக்கு மேலும் 14 லட்சம்புசல்நெல் வேண்டும். இதுதான் இன்று நம்மை எதிர்கொண்ட பெரியபிரச்சினை.

இந்தப்பிரச்சினையைத் தீர்ப்பதில் கமத்தொழில்மந்திரி காரியாலயம் எத்தகையஉதவி செய்துகொண்டிருக்கிறதென்பதை உங்களுக்குச் சொல்லவேண்டும். நெல்வேளாண்மைசெய்வதற்கென அதிகமானநிலங்களை நாம் திறந்துகொண்டிருக்கிறோம். அதே சமையத்தில் விளைவையும் அதிகமாக்கிக்கொண்டிருக்கிறோம். இவ்விதமான நடவடிக்கைகளுக்கு இருநோக்கங்கள் உண்டு. 1,32,000 ஏக்கரைக் குடியேற்ற திட்டநிலங்களுக்குத் திறந்துவிடுவதே அரசினரின் ஆறுவருடத்திட்டத்தின்நோக்கம். வருடம் 30,000 ஏக்கர்வீதம் திறந்துவிடமுடியுமென்று நம்புகிறோம்.

ஆனுல், இதனுல்மட்டும் நிலைமையைச் சமாளித்துவிட முடியாது. விளைவை அதிகமாக்கவும் நாம்முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். இப்பொழுது ஒருஏக்கர்நிலத்தில் சுமார் 20 புசல்நெல் விளைகின்றது. இது வெகுகுறைந்த விளைவாகும். நல்லாகமான நெல்லினங்களை உபயோகித்து விளைவை அதிகமாக்கமுடியும். நாட்டின்பலபகுதிகளிலும் சிறந்தவிளைவைக் கொடுக்கக்கூடிய நெல்லினங்கள் பரிசோதனைமூலம்கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. மூன்றுவருடத்துள் நாட்டிலுள்ள சகலகமக்காரருக்கும் கலப்பற்ற நெல்விதைகளை உதவமுடியுமென நாம் நம்புகிறோம். பொருட்களுக்கு உத்தரவாதமானவிலை கொடுப்பதன் மூலம் உற்பத்தியை அதிகமாக்கமுடியும்.

கூட்டுறவுக் கமப்பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்கள்மூலம் கமக்காரருக்குக் கடன்வசதிகள் அளிக்கப்படுகின்றன. உரங்கள், கமத்தளபாடங்கள், போக்குவரத்துவாகனங்கள் ஆகியவற்றை வாங்குவதற்காகவே இந்தக் கடன்வசதிகள் அளிக்கப்படுகின்றன. சிலகுறிப்பிட்ட உணவுப்பொருட்களுக்கு உத்தரவாதமானவிலைகள நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. செத்தல்மிளகாய், பாசிப்பயறு, ஈரவெங்காயம், மிளகு, புளி, காப்பிக்கொட்டை, மஞ்சள், கடுகு, குரக்கன், மக்காச்சோளம், நல்லெண்ணெய் ஆகியபொருட்களின் விலைகள் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப்பொருட்களைக் கமக்காரர் அரசினருக்கு விற்கவேண்டுமென்ற கட்டாயமில்லை.

உணவுஉற்பத்தியை உயர்ந்தபட்சமாக அதிகரிக்கச்செய்யக் கமத்தொழில்மந்திரி காரியாலயம் சகலவிதமான ஊக்கமுமளிக்கும். நாம்பிழைத்திருக்க வேண்டுமானுல் உணவுஉற்பத்தியைப் பெருக்கியே தீரவேண்டும். சிலகுறிப்பிட்ட உணவுப்பொருட்களின் இறக்குமதியை நிறுத்துவதே எங்கள்கொள்கை. உருளைக்கிழங்கை இறக்குமதி செய்யப் புதிதாகலைசென்ஸ் வழங்கப்படமாட்டாது. உருளைக்கிழங்குஇறக்குமதிநின்ருல்தான் சர்க்கரைவள்ளிக்கிழங்குபோன்ற சத்துள்ள உபஉணவுப்பொருட்களை நாம் உபயோகிப்போம்.

## ருஷியாவின் சேனுபலம்

பதின்மூவாயிரம் போர்விமானங்களால் தாங்கப்பட்ட 175 படைவகுப்புகளைக் கொண்டதாய் ருஷியாவின் சேனுபலம் இன்றுமிகவும் அதிகரித்திருப்பதாயும், 'ரெக்கற்' எனப்படும் ஆகாயபாணக் குண்டுகளைச் செலுத்துதற்கென்று ஜேர்மனியிலே பல முன்னணிஸ்தானங்களை ருஷியா அமைத்துவருவதாயும் அமெரிக்க அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ருஷியா மாதம்ஒன்றுக்கு 500 தாங்கிகளுக்குமேல் கட்டிவருகிறதென்றும், அதன் சேனுபலங்களெல்லாம் யுத்தத்திற்கென்பது பிரத்தியட்சமாகத் தெரிகிறதென்றும் அமெரிக்க பிரபலசேனுபதியாகிய ஜெனறல் வெடெமியர் தெரிவிக்கின்றூர். அது 'ரெக்கெற்' ஸ்தானங்களை அமைத்துவருவது பற்றிய தகவல் ஜேர்மனியரான 'ரெக்கெற்' நிபுணரிடமிருந்து கிடைத்துள்ளது. ஓர் அடிமைத்தொழிலாளியாக இவர் அந்த ஸ்தானங்களுள்ஒன்றில் சில வருடகாலம் வேலைசெய்து வந்ததன் மேல் சமீபத்தில் ருஷியர்களிடமிருந்து தப்பியோடியவர். இந்த 'ரெக்கெற்' ஸ்தானங்கள் தென் சுவீடனிலும், றைன்நதியினூடாகப் பற்பலவிடங்களிலும், பிறென்னர் கால்வாயிலும் இலக்குப்பார்த்து அமைக்கப்படுவதாக இவர் கூறியிருக்கின்றூர். என்ருலும் யுத்தத்தில் உடனேதானே இறங்கவேண்டுமென்பது ருஷியாவின்கொள்கையல்ல. தான் அடிப்படுத்தி வைத்திருக்கும் நாடுகளில் நம்பிக்கையற்றிருப்பதும் அதற்குரிய காரணங்களில் ஒன்ருகும். ஆயினும் யுத்தமொழு... மல் இன்னுமே தடுத்துவிடக்கூடியதாயிருக்கிறதாம். இது ருஷியாவிற்குப் பயப்பிராந்தியை உண்டுபண்ணுவதால் அல்ல, ஆனுல், ஏறக்குறைய முப்பது வருடகாலமாக கடைப்பிடித்துள்ள நாஸ்திகத்தைக் கொண்டே ருஷியாவைத் தகர்த்துவிடுவதினுல்தானும்.

## கொள்ளைநோய்க் குண்டு

அமெரிக்காவின் அந்தரங்க புதிய ஆயுதமாகியகொள்ளைநோயைப்பரப்பும் கிருமிக்குண்டு அங்கு மேரிலாந்தைச் சேர்ந்த டெற்றிக் எனுமிடத்து யுத்த சேவை நிலையத்திலே கண்டுபிடித்துச் செய்யப்பட்டதாகும். இதுபற்றிய சில விபரங்கள் தற்போது வெளியாயிருக்கின்றன. இந்தக்குண்டு நாலுருத்தல் நிறைகொண்டதாய்க் கொத்துக்கொத்தாகச் சிறுதகரங்களைக்கொண்டது. இச்சிறு தகரங்கள் ஒவ்வொன்றிலும் ஓர் முட்டைக்கோதளவு நிறைந்த தொற்றுநோய்க்கிருமிகள் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. உயரப்பறக்கும் ஓர் விமானத்திலிருந்து இக்குண்டை வீசுமிடத்துக் குறித்தஇலக்கிலே அச்சிறிய தகரங்கள்போய் விழச்செய்கின்றது. அவைகள் விழும்போது நிலத்திலிருந்து சிலஅடி உயரத்திலே தனித்தனி வெடிக்கின்றன. உட்ரான் எனுமிடத்திலே இதனைப் பரிசோதனை செய்தவிடத்து தகரங்கள்வெடித்ததும் கிருமிகளிலே பத்தில் ஒருபங்குதான் உயிர்தப்புவதாகக் கண்டறியப்பட்டது. அதனுல் நாலு தொன் குண்டுகளை வீசும்போது, போர்க்களத்தில் ஒரு சதுரமைலைப் பாழாக்கிவிடுமாம். அந்த ஒரு சதுரமைலிலும்நிற்கும் போர்வீரர்களில் அரைவாசிப்பேரையே கிருமிகள் பாதிக்குமாம். நாலு தொன் நிறையுள்ள குண்டுகள் ஓர் பட்டினத்தின் மேலாக வெடிக்கும்போது, அரைச்சதுரமைலைப் பாழாக்கிச்சுமார் ஆயிரம்பேருக்குத் தொற்றுநோயை உண்டுபண்ணுமாம்.

## பத்திமா கிரிப் பதிகம்.

— அழுது —

1

என் அரசி என் அன்னை என் இதய ராணியென
எங்குமே குரல்கள்கேட்க,
இருகரங் கூப்பியே வேண்டுவார்க் கருள்வெள்ளம்
இல்லையென் ருதுதந்தாய்;
மூன் அருமை மைந்தர்கள் மூவருக் குன்தெய்வ
மோட்சஉருக் காட்டிநின்ருய்;
மூர்க்கர்தனை வாழ்விக்கு மூலிவகை எதுவென்று
முன்னுரைகள் சொல்லிநின்ருய்;
மன்னுயிர்கள் பவக்கோடை வெய்யிலில் வதங்காமல்
மாசற்ற இருதயத்தில்
வந்துசேர்ந் துய்தற்கு எந்தநாள் ஆகுமோ?
மாணிக்கப் பேழைபோன்று
பன்னிருவிண் மீன்களணி என்னரிய அம்மையே!
பண்டத் தெருப்பி னேர்பால்
பத்திமா கிரியிலே கோயில்கொண் டெழுந்தஎன்
பரிசுத்த அன்னைமரியே!

2

உன்னையே அன்றியோர் தாயெமக் கில்லையே
உற்றதுணை வேறில்லையே
ஊதாரி மைந்தனென நீதான் அகற்றினுல்
உய்யவோர் மார்க்கமில்லையே
பொன்னையே மண்ணையே பெண்ணையே நம்பியென்
பொழுதெலாம் போக்கிவிட்டேன்
புத்தியில் லாதமரக் குத்திபோ லாயினேன்
புன்மைநர கெரியவிறகாய்
என்னையே கைவிடில் எங்குயான் தங்குவேன்
எதுவிடம் போவனம்மா!
இவ்வுலகில் ஓர்பாவி என்போல இல்லைஇது
எக்காலும் உண்மைஉண்மை
பன்னவே எண்ணிலாப் பனைவடலி கலகலெனப்
பசுந்தென்றல் ஊர்ந்துசெல்லும்
பத்திமா கிரியிலே கோயில்கொண் டெழுந்தஎன்
பரிசுத்த அன்னைமரியே

3

திரிகால மணியோசை கேட்டவப் போதிலே
செபமாலை கையிலேந்திச்
செல்வியாம் லூசியா, யசிந்தா, பிரான்சீசு
சிறுவர்கள் செபித்துநிற்க
விரிஞான சோதியாய் வெண்துகில் அணிந்தந்த
வேளையில் வந்துதோன்றி
மெய்யான தேவனுக் கையையோ நாம்செய்யும்
வேதனையை நீக்குமாறும்
ஒருகாலும் உய்விலாப் பாவிகள் உளம்இளக
ஓதுவீர் மாலைஎன்றும்
உபதேசம் சொன்னதைப் பூவுலகம் இன்னுமே
உணரவே இல்லையம்மா!
பரிவான குணமில்லை; மற்றோரில் அன்பில்லைப்
பழிபாவம் மிஞ்சுதம்மா!
பத்திமா கிரியிலே கோயில்கொண் டெழுந்தஎன்
பரிசுத்த அன்னைமரியே

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியவேத
பாதுகாவலன்
1949-ம் ஆண்டு
ஐப்பசி மாசம் 20-ந் திகதி

# மிஷன் ஞாயிறு

"மிஷன் ஞாயிறு" எனப்படும் வேதப்பரப்புதல் ஞாயிறு வருகின்றது. வந்துபோகின்றது. ஆனால், பிறராத்தும இரட்சணிய வாஞ்சையும், கிறீஸ்துதேவ இராசாவின் இராசரீகம் உலகமுழுவதும் தீவிரமாகப் பரக்க வேண்டுமென்ற தீராத ஆசையுங்கொண்ட கத்தோலிக்க மக்களுக்கெல்லாம் வருடத்தில்வரும் ஒவ்வொரு ஞாயிறுமே—ஒவ்வொரு நாளுமே ஓர் 'மிஷன் ஞாயிருக இருந்துவருமென்பதில் எட்டுணையுமே சந்தேகமில்லை. ஏனெனில், அவர்கள் தினமும் வேதப்பரப்புதலுக்காக ஓர்செபமோ, தியாகமோ, வேறெதுவோ செய்யத்தவறுர்கள். இந்தப்பெரிய அப்போஸ்தலதொண்டில் மிக்கான ஆர்வம் காண்பித்துவருவார்கள். பிறராத்தும இரட்சணிய அலுவலில் ஈடுபடுவதே தமது ஆத்துமத்தை இரட்சிக்கச் சிறந்தஉபாயமெனக் கண்டுகொள்வார்கள். அதனல் மிஷன் ஞாயிறு வருவது அவர்களுக்கெல்லாம் அத்தொண்டிலே ஓர்புதுமலர்ச்சியையும், அதைப்பற்றிஎழுதுவது ஓர்மறுமலர்ச்சியையும் உண்டுபண்ணுவனவாகும். ஆகவே அதுபற்றி நம்முதன் மேற்றிராணியாண்டவரவர்கள் சமீபத்தில்விடுத்த திருமுகத்தை ஈண்டு தருகின்ரேம்.

"சத்தியவேத போதக தொண்டு ஆற்றப்பட்டுவரும் சில தேசங்களிலே அத்தொண்டானது முன்னேற்றம் அடைந்துகொண்டுவரக் காண்பது நம்மெல்லோருக்கும் மனமகிழ்ச்சி தரும் ஒரு சம்பவமே. உதாரணமாக, ஆபிரிக்காவிலே மனந்திரும்புதல்கள் எந்நாளுமே அதிகரித்துக்கொண்டு வருகின்றன. யப்பானியதேசமோ தனது இரு கரங்களையும் விரித்துச் சுவிசேஷத் தொண்டாற்ற அங்கு வரும் மிஷனரிமாரை அன்புடனும், ஆனந்தத்துடனும் ஆவலாய் ஏற்றுக்கொள்ளுகின்றது. ஆனல், தற்போது சீனதேசத்திலோ சத்தியதிருச்சபையின் நிலைமை மிகவும்விசனிக்கத்தக்க நிலைமையிலேபாதிக்கப்பட்டிருக்கின்றது. பொதுஉடைமைக் கட்சியைச்சார்ந்த "செஞ்" சேனைகள் சென்றஇடமெல்லாம் பாழாய்க்கிடக்கின்றன. சத்தியவேதபோதகத்தை முரட்டுத்தனமாக எதிர்த்துத்தள்ளும் பாரியதேசமாகியருஷியாவிலோ எமது மெய்மறையை அழித்துவிடுமாறு ருஷியர் கொடுஞ்சமர் புரிகின்றனர்.

மேலே வரையப்பட்டவைகளிலிருந்து விசுவாசப்பரப்புதல் சபையானது வேதவிசுவாசத்தைப் புதுப்புதுநாடுகளில் பரப்புவதற்கு எவ்வளவுமுக்கியமான எத்தனமாய் இருக்க வேண்டுமென்பதை விளங்கிக் கொள்ளலாம். ஆலயங்களைக் கட்டுவதற்கும், பாடசாலைகளையும், குருமடங்களையும் ஸ்தாபிப்பதற்கும், யுத்தத்தினல் எத்தனையோ வேதப்பரப்புதல் நாடுகளுக்கு நிகழ்ந்த அழிவுகளைச் சீர்ப்படுத்துவதற்கும் முக்கியஸ்தானம் வகித்திருக்கும்சபை இதுவேயாம்.

சென்றுபோன ஆண்டுகளிலே இந்தமகத்தான சபைக்காகப் பணம்சேகரிப்பதில் நாம் அரும்பெரும் பிரயாசம் காண்பித்திருக்கிறேம். இந்தச்சபையின் பிரதான எத்தனங்களாகிய செபம், தவம், தானதர்ம மாகிய உச்சிதமுறைகளைக் கையாண்டு அதைவளர்த்து வரும்படியாய் விசாரணைப்பங்குகளிலே வயதில் முதிர்ந்தவர்களையும், பாடசாலைச்சிறுர்களையும்கூட்டமாகக் கூட்டிச் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இதுசெயல் போற்றத்தக்கதே.

இதனேடொத்த முயற்சிகளில் இன்னுமின்னும் அதிகமான ஊக்கமெடுக்கவேண்டிய காலம்வந்திருக்கின்றது. வேதப்பரப்புதல் ஞாயிறு அடுத்துவருகிறது. அதுஇம்முறை ஐப்பசி மாசம் 23-ம்தேதி வருகின்றது. விசாரணைப்பங்குகளிலே ஒவ்வோர் குடும்பத்திலும் ஒவ்வொருவரையாவது இந்தச்சபையிலே அங்கத்தவராகச் சேர்க்குமட்டும்சலியாது முயற்சிஎடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேம்.

இங்கே இதைப்பற்றிச் சில கூறவிரும்புகிறேம். ஒருவிசாரணைப்பங்கைச்சேர்ந்தவயதுவந்த ஆண்கள் பெண்கள் யாபேரும் இந்தச்சபையிலே அங்கத்தவர்களாய் இருக்கிறுர்கள். இன்னெரு விசாரணைப்பங்கிலே கலியாணமானவுடன் மாப்பிள்ளையும் பெண்பிள்ளையும் இந்தச் சபையிலே தங்களை அங்கத்தவர்களாகப் பதிந்துகொள்ளும் வழக்கம் வெகுகாலமாக உண்டு. ஒரேயொரு பத்திச்சபையைச் சேர்ந்த அங்கத்தவர்களான யாபேரும்—ஒருவரும் தவருமல்—இக்கூட்டத்தில் அங்கத்தவர்களாய் இருக்கிறுர்கள். இது எவ்வளவோ அரிதான முன்மாதிரிகையேயாம். பக்திச்சிரத்தையுள்ள முயற்சியினல் எவ்வளவைச் சாதிக்கலாமென்பதை இவைகள் சுட்டிக்காட்டுவன.

இன்னும் இந்தியாவிற்கும் இலங்கைக்குமெனப் பிரசுரஞ் செய்யப்பட்டுவரும் **"கீழ்த் தேசத்தைச்சார்ந்த விபரங்கள்"** UT CREDANT என்ற விசுவாசப் பரப்புதற் சபையைச்சார்ந்த விபரங்களைத் தெரிவிக்கும் பத்திரிகையைத் தருவித்து எல்லோரும் வாசிக்கவேண்டுமென்று ஏவிவிட நாம்விரும்புகின்ரேம். அந்தப்பிரசுரத்தை எமதுமேற்றிராசன பத்திக்கூட்டங்கள் எல்லாவற்றினதும் தலைவராய் இருக்கின்ற வண. இராசநாயகம் சுவாமிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். விசுவாசப் பரப்புதற்சபை அங்கத்தவர்கள் இச்சபைக்குக் கட்டவேண்டியநிதியை, வேதப்பரப்புதல் ஞாயிறுக்கு இரண்டுகிழமைக்கு முன்னதாகச் சேர்த்துக் கொள்ளுவதுஉசிதம். அப்படிச் செய்தால், வேதப்பரப்புதல் ஞாயிறன்று செய்யப்படும் தண்டலுக்கு அதுயாதும் இடையூருய் இருக்கமாட்டாது.

மேலும் வேதப்பரப்புதல் ஞாயிறுக்குமுந்தின தினங்களில் ஒருநவதினவிழாக் கொண்டாடி விசுவாசப்பரப்புதல் முயற்சி என்றால் என்னவென்பது பற்றியும், அந்தச்சபையின் நோக்கங்களைப்பற்றியும் விசுவாசிகளுக்கு எடுத்துக்காட்டுவது உசிதமாகும். ஏனெனில், எவ்வளவுஅதிகமாக அவைகளைப் பற்றி விசுவாசிகள் அறிவார்களோ, அவ்வளவுஅதிகமாக இந்த அரியசபையை வளர்ப்பதில் ஊக்கமெடுப்பார்கள்.

# யாழ்ப்பாணத்துணை மேற்றிராணியாரும் ஆசிரியர்களும்

யாழ்ப்பாணமேற்றிராசன கத்தோலிக்கதமிழாசிரியர்கள் ஐக்கியசங்கம் இம்மாசம் 15-ந்திகதி சனிவாரமன்று முன்னர் தனதுபிரதம முகாமைக்காரராய் விளங்கியிருந்த மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர்அவர்களுக்குப் பெரிதும்மனப்பூர்வமான ஓர்வரவேற்புஉபசாரம்அளிக்கலாயிற்று. மகத்தான இந்தஉபசாரணை நடந்தேறிய மத்தியதானமாகிய யாழ்ப்பாணநகரமண்டபமானது நகரிலிருந்தும், மேற்றிராசனத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும், கொழும்புமாநகரிலிருந்துதானும் திரளாகவந்துகுழுமிய ஆசிரியர்கள், பிரமுகர்கள், மற்றும் அபிமானிகளாலேதேங்கியிருந்த மனேகரகாட்சி பெருமிதமாட்சியுடையதாயிற்று. கேக்முதலாம் பட்சணங்களும் லகுபானவகைகளும் அனைவர்க்கும் பரிமாறப்பட்டன. அத்தருணம் பல்வேறு பாடசாலைகளைச்சேர்ந்த பிள்ளைகள் காதுக்கினிய சங்கீதங்களாலும், கண்ணுக்கினிய நடனங்களாலும் சகலரையும்மகிழ்வித்து ஆண்டவர்அவர்களுக்கு இருமுறைகளிலே பரிமள மாலைகள் சூட்டினர்கள். அதன்மேல் ஆசிரியர் எஸ். ஜெறேமியாஸ்அவர்கள் விசித்திரவேலைப்பாடமைந்து ஆண்டவர் அவர்களின் சீவியபிரமாண சித்திரப்படம் விந்தாரிக்கப்பெற்றிருந்த வந்தனேபசாரப் பத்திரம்ஒன்று படித்துக் கொடுக்க, ஆசிரியர் ஜே. ரூமான் அவர்கள் ஓர்பணமுடிப்பு தெட்சணை வைத்துப் பணிந்தனர்.

பின்னர் கைத்தொழில், கடற்தொழில்மந்திரியார் ஸ்ரீ. ஜி. ஜி. பொன்னம்பலம்அவர்கள் தமிழ்மொழியில் பேசியவிடத்து, தாமும் துணைமேற்றிராணியாரும் சர்வகலாசாலையிலே உடன்மாணவரென்றும், அநேக பொதுக்கருமங்களில் தாமிருவரும் ஒன்றுசேர்ந்து உழைத்தனரென்றும், என்றைக்குமே தமதுநிர்ணயத்தில் தவருத ஆண்டவர் அவர்களுடன் இன்றைக்குமேதாம்ஒத்துழைக்கும்நிலையில் இருந்துவருகிருரென்றும்கூறிநின்றனர். வடமாகாண வித்தியாஅதிகாரியான ஸ்ரீ சற்குணம் அவர்கள் எழுந்து ஆண்டவர்அவர்கள் மேற்றிராணித்துவபதவிக்கு உயர்த்தப்பெற்றதையிட்டு அவருக்கு மனமுவந்த வாழ்த்துக்கூறினர். எமிலியானுஸ்ஆண்டவரை அறிவதே தியாகமிக்கஓர் கல்வியாகும்; அவரைக்காண்பதே ஓர் அதிஷ்டமாகுமெனக் கூறினர். இவரைத்தொடர்ந்து ஸ்ரீ எஸ். நடேசன் அவர்கள் பேசியபோது: துணைமேற்றிராணியாரைத் தாம்அறியவந்த காலமுதல் அவரில்சிறந்துவிளங்கும் மனத்தாழ்மை தமக்குப்பெரிதும் மனப்பதிவை உண்டுபண்ணியதாகக் குறிப்பிட்டனர். சாவகச்சேரிப் பிரதிநிதி ஸ்ரீ.வி. குமாரசாமி அவர்கள்எழுந்து: ரூமாபுரிசெய்த தெரிவாலே தமிழ்ச்சமூகம் பெருமையடை[illegible]தனக்கூறித் தற்போது எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் உயர்த்தப்பெற்றிருக்கும் உந்நத பதவிக்கு அவரதுவாழ்க்கையைச் சீராக வழிநடாத்திய கத்தோலிக்க திருச்சபைக்குப் பாராட்டுரை வழங்கினர். தமதுஅபிப்பிராயங்கள்மட்டிலே ஆண்டவர்அவர்களைத் தம்பக்கமாகக் கவர்ந்து வெற்றிகொள்ளுமாறு பல முறைகளிலும் தாம்அவரிடம் சென்றதாகவும், ஆனல் அவரதுவெற்றிகொள்ளும் வழிமுறைகள் எதிர்க்கவாற்றுதனவாயிருந்தமையாலே பலமுறைகளிலும் தாமேவெற்றிகொள்ளப்பெற்றுத்திரும்பியதாகவும் பகரலாயினர். செனற்றர் எஸ்.ஆர். கனகநாயகம்அவர்கள் பேசியபோது: அநேகர் சிலகாரியங்களைச் சாதித்துவிட்டு உலகறியப் பறைசாற்றுவார்கள். ஆனல், தமிழ்மக்களிடையே அதிகமானகாரியங்களைச் சாதித்துவிட்டு அற்பமாகப்பேசிக்கொள்ளுகிற ஒருவர்இருந்தால் அவர் எமிலியானுஸ் பிள்ளை ஆண்டவரேயெனச் சாற்றினர். சைவ வித்தியாவிருத்திச்சங்க பிரதம காரியதரிசியான ஸ்ரீ எஸ். இராசரத்தினம்அவர்கள்எழுந்து: கல்விசம்பந்தமான சகலவிஷயங்களிலும் தமது வெளிநோக்கில் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர் உள்ளபடியே பொதுவானவரென்றும், இலங்கையிலே கல்வித்திட்டவிஷயமாய் வீரத்துவமாகப் போர்களாடிச் சமயஸ்தாபன பாடசாலைகளுக்குப் பெருமைவாய்ந்த ஓர் ஸ்தானத்தைப்பெற்றளித்த பொஞ்சீன் ஆண்டவரது திருஅங்கியைச் சுதந்தரித்துக்கொள்ள எல்லாவகையாலும் துணைமேற்றிராணிஆண்டவர் தகுதியானவரேயென்றும் புகழ்மாலைசூட்டிநின்றனர்.

துணைமேற்றிராணியார் அளித்த பதிலில் கூறியது வருமாறு: இந்தவரவேற்புஉபசாரத்திலே ஆசிரியர்சங்கம் நமக்குக்காட்டிய பேரன்புக்காகப் பெரிதும் நன்றிபாராட்டுகின்ரேம். நாம் உங்கள்பிரதம முகாமைக்காரராக இருந்தபோது நாம் திடதைரியம் படைத்த ஓர்மனுஷராய் இருப்பதாக உணர்ந்தோம். ஏனெனில், நமக்குப் பக்கபலமாக எழுநூறு ஆசிரியர்களின் பலத்தைக்கொண்டிருந்தோம். ஆனல், நாம்மேற்றிராணியாராகத் தெரியப்பெற்றபொழுதோ ஆசிரியர்களின்பலத்தைஇழந்து ஆருதவியற்ற ஓர் அனுதை போல் இருப்பதாக உணர்ந்துகொண்டோம். ஆயினும் இந்தப்பெரிய வரவேற்புஉபசாரமானது நமக்குண்டான கலக்கத்தைஒழித்து நமக்குப்புத்துயிரும், புதுப்பலமும் அளித்திருக்கிறது. இத்தகையபக்கத்துணை இருக்கும்போது ஆயரும், நல்வழிகாட்டியுமென்ற மட்டிலே நமதுஉந்நதபதவிக்குரிய கடமைகளைப் பெரிதும்மனச்சமாதானத்துடன் ஆற்றிவரலாமென எதிர்பார்க்கிறேம். சாதிசமயபேதமின்றி ஸ்ரீலங்காவின் பிள்ளைகள் எல்லோரினதுமே முன்னேற்றத்திற்காகப் பணியாற்றுவதுதான் பொதுவிலே நமதுகொள்கையாயிருந்துவரும் என்பதே.

ஈற்றில் ஆசிரியர் ஜி.ஜே. பெனடிக்ற் அவர்கள் சமுகமளித்த சகலருக்கும் நன்றித்துதிகூறியதும் வரவேற்பு உபசாரணைவிழா இனிதே நிறைவெய்தியது.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

மிக்கதுயர்கொண்டு, மருதமடுச் செபமாலைமாதாவிடத்தும், அழுகைப்பிரலாபத்துடன் அர்ச். அந்தோனியாரிடத்தும், நவநாள்செய்து மன்றுடினேன். நவநாள் முடிந்ததும்எனதுகாரியம் நான் நினைத்தபடியே அனுகூலமடைந்தது. மேற்படி சுத்தவாளர் ஸ்துதிக்கப்படுவார்களாக. நேர்த்திப்படி இதைப்பத்திரிகையில் பிரசுரித்துக் காண்பிக்கின்றேன்.

ம. பாக்கியரத்தினம்
குராவத்தை

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அர்ச். அந்தோனியாரிடம் நான்கேட்டுக் கொண்ட மன்றுட்டுகிடைக்கப்பெற்றேன். அவர்நாமம் என்றும் புகழப்படுவதாக்

ஞா. பெ. செ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடித்தினம்

இம்மாதம் 30-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை கிறீஸ்து இராசாபெருநாளன்று மிஷன்ஞாயிறு நிதிக்காக யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே ஓர் கொடித்தினம் அநுசரணைக்குக் கொண்டுவரப்படும். எல்லாக் கட்டளைச்சுவாமிமாரும், பாடசாலை அதிகாரிகளும், பத்திக்கூட்டங்களைச்சேர்ந்தோர் சகலரும் இவ்வுத்தமகைங்கரியத்திற்கு உதவி செய்யுமாறு தயவாய்க் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விசுவாசப்பரப்புதற்சபை
அதிபர்

## தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

வித்தியாதிபதி அவர்களால் அனுப்பப்பட்ட சுற்றுநிருபமொன்று ஆசிரியர்களின் கவனத்துக்கு இதன்கீழ் பிரசுரிக்கப்படுகிறது.

Jaffna,
18-10-49.

G. A. Gurusamy, O. M. I.
கத். பா. பொதுமுகாமைக்காரர்.

1949-ம் ஆல சுற்றுநிருப இல. 37

M கிளை
வித்தியா கந்தோர்,
கொழும்பு, 1949-ம் ஆல ஓகஸ்ற் மீ 23 உ.

### பாடசாலைகளுக்கான ஒலி பரப்பு

அன்பார்ந்த ஐயா,

பாடசாலைகளுக்கான ஒலிபரப்புச் சேவையின் தரத்தைத்திருத்துவதிலும் ஒலிபரப்பைக்கேட்கும் பாடசாலைகளின் தொகையைக் கூட்டுவதிலும் கூடியளவான முயற்சி எடுக்கவேண்டுமென்பது வித்தியாபகுதியின் நோக்கமாகும்.

2. றேடியோக்களை வாங்குவதிலும் அவற்றைவைத்துப் பராமரிப்பதிலும் ஏற்படும் பணச்செலவுக்குத்தகுந்த அளவான பலன் அடையக்கூடியதாக அதன் தரத்தில் அத்தகைய திருத்தம் ஏற்படுத்தப்படும் என்று பாடசாலைகள் நிச்சயமாக அறிந்தாலன்றி பாடசாலைகள் றேடியோக்களை வாங்கி உபயோகிப்பது இயலாதகாரியமென உணர்ந்தபோதிலும், றேடியோச் சேவையில் திருத்தமேற்படுத்துவதிலுண்டாகும்செலவு நியாயமானதெனப்படுதற்கு ஒலிபரப்பைக்கேட்கும் பாடசாலைகளின் தொகை போதியளவு கூடுதலாயிருக்க வேண்டுமென்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். இவ்விரண்டு விஷயங்களும் ஒன்றோடொன்று தொடர்பு பட்டிருத்தலால் பாடசாலைகளுக்கான ஒலிபரப்பை அநுகூலம் அடையச் செய்வதில் இருதிறத்திலும் ஒத்துழைப்பு அவசியம் வேண்டப்படுகின்றது.

3. உமது பாடசாலைக்கென ஒரு றேடியோவை இதுவரை நீர் பெற்றிருக்காவிடின், கூடியவிரைவில் ஒன்றைவாங்கும்படியும், வாங்கினதும் உமது பாடசாலையை ஒலிபரப்பைக் கேட்கும் பாடசாலையாகப் பதிவுசெய்யும்படி இக்கந்தோரின் M கிளைக்கு எழுதும்படியும் நான் ஆலோசனை கூறுகின்றேன்.

4. பாடசாலைகளுக்கான இவ்வொலிபரப்புச் சேவையில் திருத்தமேற்படுத்துவதற்கான வழிவகைகள் எவையென்பது பற்றி நீர் கூறக்கூடிய ஆலோசனைகளை எமக்கு அறிவிப்பது நன்று. இவ்விஷயத்தோடு சம்பந்தப்பட்ட எமது உத்தியோகஸ்தர்கள் உம்மைச் சந்தித்து இவ்விஷயத்தைப் பற்றி உம்மோடு கலந்துரையாட எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கின்றனர்.

5. அரசினர் பாடசாலைகள் தொடர்பில், அவற்றின் தொகை அதிகமாயிருப்பதனால் சகல பாடசாலைகளுக்கும் வித்தியாபகுதி றேடியோக்களை வினியோகிக்கக் காலம்செல்லும். ஆகவே அரசினர் பாடசாலைகளின் அதிபர்கள் அல்லது தலைமை ஆசிரியர்கள் பெற்றோர்—ஆசிரியர்சங்க மூலம் அல்லது வேறு தனிப்பட்டவர்களிடமிருந்து நன்கொடையாகத் தம்பாடசாலைகளுக்கு வேண்டிய றேடியோக்களைப் பெறுவதற்கு விடாமுயற்சி எடுக்கவேண்டும். றேடியோவை வாங்கியதும் ஒலிபரப்பைக் கேட்கும் பாடசாலையாகப் பதிவுசெய்வதற்கு இக்கந்தோரின் M கிளைக்கு தயவு செய்து அறிவிக்கவும் வித்தியாபகுதியினாலோ தபாற் தந்திப் போக்குவரத்துப் பகுதியினாலோ சில அரசினர் பாடசாலைகளுக்கு றேடியோக்கள் இதுவரை கொடுக்கப்பட்டுள்ளன. அப் பாடசாலைகள், ஒலிபரப்பைக் கேட்கும் பாடசாலைகளென இதுவரை பதிவுசெய்யப்படாதிருந்தால், அவை அங்ஙனம் பதிவுசெய்யும்படி உடனே விண்ணப்பஞ் செய்யவேண்டும்.

6. பாடசாலைகளுக்கென நிகழ்த்தப்படும் பேச்சுகளின் தொகையைக் கூட்டுவதற்கும் அவற்றினால் ஆகக்கூடிய பயனை அனுபவிப்பதில் பாடசாலைகளுக்கு உதவி செய்வதற்கும் முயற்சி செய்யப்பட்டு வருகின்றது. இவ்வொலி பரப்புச் சேவையினால் அதிக பயனை எங்ஙனம் அடையலாம் என்பது பற்றிய விபரமான ஆலோசனைகள் பாடசாலைகளுக்கான புதிய ஒலிபரப்புத் தவணை ஆரம்பமாகுமுன் பாடசாலைகளுக்கு அனுப்பப்படும்.

இங்ஙனம்,
தங்கள் பணிவுள்ள ஊழியன்,
கே. எஸ். அருள்நந்தி,
பதில் வித்தியாதிபதி.

## இரணமடு - பரந்தன் புதுக்குடியேற்றக் குடிகளுக்கு 190 சோடி எருமைகள் வழங்குவதற்கு விண்ணப்பப் பத்திரங்கள்

இரணமடு-பரந்தன் புதுக்குடியேற்றக் குடிகளுக்கு 190 சோடி எருமைகள் வழங்குவதற்கு 1949-ம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணி வரைக்கும், கொழும்பு கிருஷிகப் பகுதி றெண்டர் போர்ட் தலைவர் விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள். குறித்த விண்ணப்பப்பத்திரங்கள் ரூபா50 கொழும்புத்திறைசேரியில், அல்லது எந்தக்கச்சேரியிலாவது கட்டிய ஒவ்வொரு பற்றுச்சீட்டுக்கும், ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரமாக 1949-ம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ந் திகதி சனிக்கிழமை பகல் 12 மணிக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். மறுவிபரங்கள் யாழ்ப்பாணக் கச்சேரியில் வடமாகாண ஏஜண்டரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

## கரையூர் விவாக இலாபநிதிச்சங்கம் வருடாந்த கூட்டம்

கரையூர் விவாகஇலாபநிதிச்சங்கத்தின் வருடாந்தபொதுக்கூட்டம் வருகிற 30-10-49 ஞாயிற்றுக்கிழமை மாலை சற்பிரசாதஆசீர்வாதத்தின்பின் சென் யேம்ஸ்ஆண்பாடசாலைமண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள், அபிமானிகள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

காரியதரிசி

## நல்லூர்மீசாம்

### எங்கள் மீசாமின் அற்புதவரத்திகள்

**முகமாலை: அர்ச். பிலோமினம்மாள்**

முகமாலையிலுள்ள சொற்பகிறீஸ்தவர்களுக்கென ஏறக்குறைய இருபதுவருடங்களுக்குமுன் காலஞ்சென்ற வண. அந்தோனிசுவாமியவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இக்கோவில், வண. ஞானப்பிரகாசர் சுவாமியவர்களால் அப்போது போர்த்துக்கீசர்காலத்திலே வேதக்கோவிலொன்று இருந்த நிலையத்துக்கு அருகாமையில் கொண்டுவரப்பட்டது. அர்ச். பிலோமினம்மாள் சுரங்ககாலத்தில் வேதசாட்சியாகமரித்த ஓர் அர்ச்சியசிஷ்டவள். அர்ச். வியான்னி அருளப்பர்காலத்திலே இவ்வற்புதவரத்தி பிராஞ்சுதேசம்முழுவதும் புரிந்துவந்த அற்புதங்கள், அப்போது அத்தேசத்திலே தளர்ந்துபோயிருந்த விசுவாசம் புதுமலர்ச்சியடைவதற்குப் பேருதவியாயிருந்தன. முகமாலையிலே அவவுடைய திருப்பதி ஆரம்பமானகாலமுதல் தம்முடையபக்தர்களுக்கு அவ அருளிவந்திருக்கும் அரியவரங்களைக்கண்டு வருடந்தோறும் யாத்திரிகர்தொகையினாலும், பத்தியருட்சியினாலும் அப்பதி சிறந்துவரலாயிற்று. இவ்வருடமும் எவ்வருடமும்போல் பக்தர்கள் பெருந்தொகையாக அவவுடையபாதத்தில் வந்து திரண்டார்கள். வழமையான ஆராதனைகள் நடைபெற்றன. அத்துடன் திருவிழாக்கள் நடைபெற்றதினங்களிலே ஒவ்வொருநாளும் காலமே ஒன்பதுமணிக்குச் செபமாலையும், பின்னேரம் ஐந்துமணிக்குச் சிலுவைப் பாதையும் நடைபெற்றுவந்தன. கடைசிநாளன்று ஆயிரத்துக்கதிகமானபேர்கள் திருச்சிலுவையைப் பின்செல்ல, வண. அகுஸ்தீன்சுவாமியவர்கள் ஒவ்வொருஸ்தலத்துக்கும் விளக்கங்கொடுத்து நடப்பித்த சிலுவைப்பாதையானது, அதில்பங்குபற்றிய சகலருடையவும் ஞாபகத்தில் என்றும் அழியாது இருந்துவருமெனலாம். சிலுவைப் பாதைமுடிந்ததும் வியாதிஸ்தர் அர்ச். பிலோமினம்மாளின் திருப்பண்டங்கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர்.

மாதாந்தம் இத்திருப்பதியிலே ஒரு திவ்வியபூசையென்கிலும் நிறைவேற்றும்படி அநேகர் கேட்கின்றனர். திவ்வியபூசைசெய்விக்க விரும்புகிறவர்கள் எமக்கு எழுதிக்கொள்வார்களாக!

**சண்டிலிப்பாய் அர்ச். சின்னத்தெரேசம்மாள்:** இலங்கையிலும், சிங்கப்பூரிலுமுள்ள உபகாரிகள்அநேகரின் உதவியைக்கொண்டு வண. ஞானப்பிரகாசர் சுவாமியவர்கள் ஓர்முதற்தரமான சிறந்தஆலயத்துக்கு அஸ்திவாரம் இட்டிருந்தார். அஸ்திவாரத்துக்கிடையிலுள்ள ஓர்சிறுகொட்டிலில் ஆராதனை நடைபெற்றுவந்தது. சென்ற வைகாசித் திருநாளுக்குமுன் கொட்டிலைவேய்ந்து திருநாளுக்கு ஆயத்தம் செய்யப் பார்த்தபொழுது மரங்கள் உக்கிஇறந்து கிடுகுகளைத்தானும் தாங்கப்பலமற்றனவாய் இருந்தமையால் அதைப்பிரித்து வேலைசெய்தோம். சில கற்றூண்களைக்கட்டி ஓர்பெலப்பான கூரைபோடநினைந்தோம். காத்திராப்பிரகாரம் வேலைபெருத்து இன்னும்கோவில்திருப்பணி முற்றுப்பெற்றபாடில்லை. அதனால் இக்கோவிலுக்குச்சேர்ந்தவர்களாய்ப் பிறவூர்களில்உள்ளவர்களும், சின்னத்தெரேசம்மாள் கோவில் எப்போதுஎழும்புமென்று ஆவலுடன்எதிர்பார்க்கின்றசகலரும், இந்தஅற்புதவரத்தியிடம் சகாயங்களைப்பெற்றவர்களும் உதவிசெய்வார்களென நம்புகிறோம்.

**கியமார்புரி: அர்ச். றீத்தம்மாள்**

ஓர்சிறு குடியேற்றகிராமமாகிய இப்பதியிலே தைமாசத்தில் மூவிராசாக்கள் திருநாளுக்கடுத்த ஞாயிற்றுக்கிழமை திருநாள் கொண்டாடப்படுகிறது.

**சகல அர்ச்சியசிஷ்டர்களின் திருநாள்:** இவ்வருடம் இத்திருநாள் மாசத்தின் முதற்செவ்வாய்க்கிழமையில் வருகின்றது. அன்றையதினம் மானிப்பாய் அர்ச். அந்தோனியார்கோவிலில் திவ்வியபூசை நிறைவேறுமென்பதை ஞாபகப்படுத்துகின்றோம்.

"குடும்பத்தில்ஏற்பட்ட பற்பலகஷ்டங்களைத் தீர்த்த மானிப்பாய், அர்ச். அந்தோனியாருக்கு நன்றியாக அவர் பேரால் 'நல்லூர்மீசாம்' தொண்டுகளுக்கென அனுப்பும் தொகையை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

B. G.

"நான் ஆசித்து வேண்டிக்கொண்ட இருவிண்ணப்பங்கள் அனுகூலமாகும் பட்சத்தில் மானிப்பாய், அர்ச். அந்தோனியார்கோவில் கட்டிட நிதிக்கென 10 ரூபா அனுப்புவதாக நேர்ந்தேன். காரியம் சித்தியாயிற்று. அதன்பிரகாரம் தங்கள்விலாசத்துக்குப் 10 ரூபாவையும் அனுப்புகிறேன்.

ம. ட. பேசாலை.

"சத்தியவேதபாதுகாவல"னில் வெளிவரும் தங்கள்வேண்டுகோளின்பேரிலும், எனதுநேர்த்தியின்படியும் இந்த 20 ரூபாவையும் மூளாய், பரிசுத்த செபமாலைமாதாவின் பெயரால் அனுப்புகிறேன். இதைத்தயவாய்ஏற்று இன்னும் நினைத்தகருமங்கள் அனுகூலமாகும்படி மூளாய், பரிசுத்தசெபமாலை மாதாவிடம் விசேஷவிதமாய் வேண்டிக்கொள்ளவும்.

S. R. Ridgeway—Colombo.

ஓடர் அனுப்புவது:
Sub-Post office,
NALLUR.

எனது விலாசம்:
Fr. J. A. Rajanayagam, O. M. I.
St. Francis Xavier's Church,
Nallur, JAFFNA.
வண. ஜே. ஏ. இராசநாயகம்சுவாமியார்
அர்ச். சவேரியார்கோவில்
நல்லூர், யாழ்ப்பாணம்.

## மிஷன்ஞாயிறு

ஆசனக்கோவில்விசாரணைப்பங்குஐக்கிய சங்கத்தின் ஆதரவிலே அடுத்து நிகழும் 23-ந்திகதி மிஷன்ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்தின்பின் சம்பத்திரிசியார் கல்லூரிமண்டபத்தில் "மிஷன்ஞாயிறின் நோக்கங்களும்" எனும்விஷயமாய் திரு. ஜி.ஜே. பெனடிக்ற்அவர்கள் ஓர்சம்பாஷணை நிகழ்த்துவார். வண. பி. ரி. ஜேம்ஸ் சுவாமியவர்கள் தலைமை வகிப்பார்.

## காலிநகர் ஆசனக்கோவில்

காலிநகர் பரிசுத்த மரியநாயகியின் மேற்றிராசனக்கோவில் கட்டியெழுப்பப்பெற்ற 60-ம்வருட வைரயூபிலி விழா இம்மாதம் 2-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பெரிதும் ஆடம்பரமாகக் கொண்டாடப்படலாயிற்று. முதல்நாள் சாயந்தரம் அங்கு கோட்டைச்சிற்றாலயத்திலிருந்து கோவில்நோக்கிப் பரிசுத்த செபமாலைநாயகியின் திருச்சுரூபத்தையுங்கொண்டு நடைபெற்ற மகா சுற்றுப்பிரகாரம் இந்தயூபிலிவிழாக் கொண்டாட்டத்தைப் பெரிதும்பரிமளிக்கச் செய்வதாயிற்று. சுற்றுப்பிரகாரம் கோவிலையடைந்ததும் திரு. சி. ஈ. விக்கிரமநாயக அவர்களால் காணிக்கையாக உபகரிக்கப்பெற்ற தங்கமுடி ஒன்றை மாதா சுரூபம் கரத்தேந்தியிருந்த திருக்குழந்தை யேசு திருச்சுரூபத்தின்சிரசில் காலிமேற்றிராணியார் மிகுந்த ஆசாரத்துடன் சூட்டியபின் தேவதாயாரின் சுரூபங்கொண்டு சகலரையும் ஆசீர்வதித்தனர். பின்னர் வேஸ்பர்பாடிச் சற்பிரசாத ஆசீர்வாதம் அருளியதோடும், மறுநாள் யூபிலித்தோத்திர பெரியபாடற்பூசையோடும், அன்னதானம் முதலியவற்றோடும் யூபிலிவிழா இனிதேமுடிவாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதோட்டத் தபால்

(நாட்டுத் தூதன்)

ஜ்யாகாவலன் ஆசிரிய! இம்முறை சிறுபோகவேளாண்மை சீராகப் பலனளித்திருப்பதும், காலபோகவேளாண்மையும் நற்பலனளிக்குமென்ற நம்பிக்கையும் சந்தோஷந்தரும் செய்திகள் ஆகும். இறைவனருளால் இவைகளெல்லாம் எம்மை இன்புறச்செய்ய, செயற்கைப்படைப்பிற்குத் தலைமையான மனிதருள் ஒருபாலார்மட்டும் சர்வாதிகாரமுறையால் எம்மைத் தின்புறச்செய்துவருவது வருந்தத்தக்கதே. எல்லாம் இக்காலகோலமென்றுதான் எண்ணவேண்டியிருக்கிறது.

மாந்தைமாதாவை மறவாதீர்கள்—மாதாபக்தியாலே பண்டைக்காலம் மங்காப்புகழ்பெற்றோங்கிய மாந்தைப்பதியிலே அடம்பன் கட்டளைக்குரவரின் அயராமுயற்சியால் அமைக்கப்பட்டுவரும் லூர்துகெபியை மாதாபக்தர்களே மறவாதீர்கள்! மருதமடுத் திருப்பதியிலே செம்பொற்கிரீடதாரியாகச் சிம்மாசனங்கொண்டு எழுந்தருளியிருக்கும். திருச்செபமாலை இராக்கினியின் பழையபதியாகும் இப்புனிதஸ்தலத்தை ஒர்போதும் மறவாதீர்கள்! நிதிக்குறைவால் இன்னுஞ் சொற்பபகுதி பூர்த்திபெறுமல் இருக்கின்றது. அதனுல் இன்னமும்தேவைப்படும்பணத்தைத் தாராளமாகவழங்கித் திருக்கெபித் திறப்புவிழாவைக் கண்டு களிக்க மறவாதீர்கள்! மாந்தைமாதா மகிமைபெறுவாராக!

பழம்பெருந்தெரு—பழையகாலத்திலே மிகவும்பிரஸ்தாபம் பெற்றிருந்ததும், தற்போது சனப்புழக்கமின்றிக் கீழ்நிலை அடைந்துகிடப்பதுமாகிய மன்னூர்-பூநகரித்தெருவை மீண்டும் பிரபலியம்பெறச் செய்வதற்கானவேலைகள் ஆரம்பமாகி நடைபெற்றுவரக்காண்பது ஆனந்தந்தருவதாகும். இதுபூர்த்தி பெற்றுப் பாவனைக்குத் திறந்துவைக்கப்படுமிடத்து மன்னூர்-யாழ்ப்பாணப் பிரயாணம் காலச்சுருக்கத்துடன் மாத்திரமல்ல, செலவுச்சுருக்கத்துடனும் முடிவுறுமென்பது நிச்சயம்.

பயன்தராவீதிகள்—மணற்குளப் புகையிரதஸ்தானத்திலிருந்து நானாட்டானுக்கும், அங்கிருந்து அளிவக்கை வழியாக முருங்கனுக்கும், முருங்கனிலிருந்து சிறுகண்டலினூடாகச் சிலாவத்துறைக்கும் செல்லும்வீதிகளையும், பரப்புக்கடந்தானிலிருந்து மருதமடுத் திருப்பதிக்கும், அடம்பனிலிருந்து கண்டலுக்கும் செல்லும்வீதிகளையும் பயன்தராவீதிகளென்றே தூதன்பகருகின்றுன். ஏனெனில், மக்களுக்கு இவைகள் மாரிகாலப்பாவனைக்கு முற்றுகவே உதவா. மழைகாலத்தில் இத்தெருக்களால் பிரயாணஞ்செய்வதிலும் காடுகரம்பைகளால் புகுந்துபுகுந்து பிரயாணஞ்செய்வது உசிதமாகும். அரசினரால் அன்றேல்சங்கங்கள் சமுதாயங்களால் ஏற்படுத்தப்படும்எதுவும் பொதுமக்களின் சௌகரியமான வாழ்க்கைகளுக்கேற்றதாயிருக்கவேண்டும். அன்றேல் அவைகள்இருப்பதிலும் இல்லாமை நன்றென்றே தூதன் கருதுகின்றுன்.

இப்போது அவசியமில்லையாம்—அடம்பன் அரசினர்வைத்தியசாலைக்கு இப்போதுஓர்பிரதமடக்றர் அவசியமில்லையென ஒருநாள் விழுகிழவன்ஒன்று தடதடத்தகுரலிலே சொல்லிக் கொண்டுபோனதாம். பக்கத்தில்நின்ற ஒருவர் "ஏன்பெரியவர் அப்படிச் சொல்லுகிறீர்" என்றுகேட்டதற்கு, தற்போதிருக்கும் அப்போதிக்கரி அவர்கள் நல்லஅனுபவம்படைத்த ஓர்நல்லவைத்தியரென விடையிறுத்துவிட்டு ஊன்றுபொல்லுடன் கிழவன்புறப்பட்டுப் போனதாம்.

சிலசிரிப்புகள்—சமீபத்திலே மந்திரியார் திருசிற்றம்பலம் அவர்கள் அடம்பனில் காணப்பட்டார்களாம். அப்போதுஅநேகர் அவரைவழிமறித்துப் பிரயோசனமற்ற சிலபலகேள்விகளைக் கேட்டார்களாம். உடனே அவர் குடர்குலுங்கச் சிரித்ததும் ஓர்சிரிப்புத்தானும். மாந்தையைச்சேர்ந்த விளாங்குளிஎன்னும் கிராமத்திலுள்ள தபால்பெட்டியினுள் தேனீக்கள் குடியிருந்தனஎனத் தினசரிப்பத்திரிகைஒன்றில் வெளியாயிருந்ததும், மாந்தைக்குடியேற்றவிஷயமாகச்சிலபெரியார்நடந்துகொள்ளும்முறையும் சிரிப்புக்கேதுவானவைகளாகும்.

சுபம்!

---



அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சேன் வின்சென்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்

### நன்றியறிந்த ஸ்தோத்திரங்களும் மன்றுட்டங்களும்

அல்லைப்பிட்டி:—என் அலுவலொன்று கைகூடவேணுமென்று அர்ச். அந்தோனியாருக்கு நேர்த்திசெய்து அதற்காகப் பிரயாசப்பட்டு உழைத்துவரும்போது அது மெத்தவும் கஷ்டமானதாயும் என் நன்மையைப் பாதிப்பதாயுமிருக்கக்கண்டு நேரே தேவாலயஞ்சென்று அர்ச். அந்தோனியாரின் திருச்சுரூபத்தின் முன் வெகுபக்திவிநயத்துடனும் தாழ்மையுடனும் இரந்து அது அநுகூலமாகும்படி கேட்டேன். அவரின் அருளால் ஒரு கிழமைக்குள் அது அநுகூலமானதினுல் அதற்கு நன்றியாக அவரின் ஏழைகளுக்கு ரூபா 2 அனுப்புகிறேன்.

அல்லைப்பிட்டிவாசி

கோலாசிலாங்கூர்:—யேசுவின் திருஇருதயத்தின் இரக்கத்தினுலும், அர்ச். அந்தோனியாரின் மன்றுட்டாலும் எனது மகனுக்குண்டானநோய் பூரண சுகம் பெற்றது. நேர்த்தியின்படி ஏழைகளின் தருமஅப்பத்திற்கு ரூபா 7 அனுப்புகிறேன். இதைப்பாதுகாவலனில் பிரசுரிக்கும்படியுந் தாழ்மையாய்க் கேட்கிறேன்.

சே. அ.

மாதகல்:—திருஇருதயநாதரின் அணைகடந்த அன்பினுலும் கோடியற்புதராகிய அர்ச். அந்தோனியார், பாலயேசுவின் சின்னத்திரேசா, அர்ச். சூசையப்பரினதும் இன்னும் சில அர்ச்சியசிஷ்டர்களின் புதுமையினுலும் எனக்குண்டான கசநோய்மாறியது. இதை நேர்த்தியின்படி பிரசுரிக்கின்றேன். அன்னோரின் நாமங்கள் என்றும் புகழப்படுவதாக. நேர்த்தியின்படி 1 ரூபா அனுப்புகிறேன்.


சூ. சபீனு

### கேட்டநன்மைகள் அனுகூலமானதினுல் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

நீர்கொழும்பு: மேரிபெற்றலோனியா 2-00—கல்கமுவா: பே. செபஸ்தியான் 1-00—மஸ்கேலியா: சூ. செபஸ்தியம்மாள 1-00, அந்தோனியம்மாள் 2-00—மாம்புரி: ஏ. மரியாம்பிள்ளை 2-00—கறுவாக்காடு: ஓர்உபகாரி 1-00—முந்தல்: பி. பேதுரு பெர்னாண்டோ 2-00—கல்கமுவா: அ. வஸ்தியான்-50—வவுனியா பி. சந்தியாப்பிள்ளை 2-50—அனுராதபுரம்: ஜே. ஜே. டி சில்வா 3-00—றாவன்வலை: எஸ். பொன்னையா 2-00—கண்டி: பி ஏ. மாட்டீன் 1-00—நாத்தாண்டி: வி டி பி. பெரேரு 4-00—கழுத்துறை: ச. திமிங்குப்பிள்ளை 2-00—அம்பிற்றியா: எம். டானியல் 2-00—மாருவில்: பிரூங் அன்ரன் 11-00—கண்டி: எம். மிக்கேற்பிள்ளை 1-00—அல்லைப்பிட்டி: ஓர்உபகாரி 2-00—பண்டாரவளை: எல். பி. அன்ரனி 1-50, எஸ். அலீக் 1-50, எஸ். மோசேஸ் 1-50, எஸ். தோமஸ் 1-50, எம். எம். சுப்பையா 1-00—மாமபுரி: ஏ. மரியாம்பிள்ளை 1-00—கண்டி: மிஸ்செஸ். மாட்டீன் பிரான்சீஸ் 1-00—பண்டாரவளை: சூசைமரி பீற்றர் 2-00—கொற்மல்லி: எவ். பி. சாமுவேல் 2-00—புத்தளம்: பிரூங் எல். லீயோ 5-00—நரக்களி: வ. [illegible] 2-00—மாத்தளை: டி. [illegible] 2-00—


# லெக்டோஜன்

## உணவை அருந்தும் குழந்தைகள் எல்லாம் செழித்து வளருகின்றன.



குழந்தை ஆர். ஏ. எவ். வயது 9 மாதங்கள்: கோட்டாஞ்சேனை

லெக்டோஜனை நாம் ஏன்

"இலங்கைக் குழந்தைகளின் உணவு"

என்று அழைக்கிறோம் என்பதற்கான காரணங்களில் இந்தக் குழந்தையின் செழுமையான வளர்ச்சியும் ஒன்றாகும்.




# லெக்டோஜன்

எல்லா ஸ்டோர்களிலும் கூட்டுறவு டிப்போக்களிலும் விற்பனை செய்யப்படுகின்றது.


மயிலங்காடு: இ. ச. அன்னம்மா 1-00—பனிச்சவில்லு: எஸ். திரேசா 5-00—இளவாலை: எஸ். யோசேப் இராசதுரை 2-00—கொச்சிக்கடை: பி. கயித்தான் 5-00—காக்காப்பள்ளி: ஆர். எஸ். ஆர். காசியையா 2-00—தலவாக்கொல்லை: விக்ரர் ஜே. சகாயம் 2-00—நாத்தாண்டி: வை. ஐ. கோமஸ் 1-00—உடப்புசலாவை: எஸ். எம். யோசேப்பு 15-00—யாழ்ப்பாணம்: மிசெஸ். பி. மோசேஸ் 2-00—சுண்டிக்குளி: பி. எஸ். ஆர். 1-00—பாஷையூர்: அம்புறோஸ் யோசேப்பினு 1-00—கரவெட்டி: பி. கபிரிகேற்பிள்ளை 2-00—கல்கமுவா: ம. அஞ்சலீனுள் 1-00—சிலாவ: மிசெஸ். உவினிபிறெட் பெர்னாண்டோ 1-00—டொன்கொற்றுவா: எஸ். எஸ். இ. 3-00—கல்கமுவா: அ. வஸ்தியான் 1-00—அக்கரபத்தனை: சி. டபிள்யு. 1-00—யாழ்ப்பாணம்: சலமன் 2-50—அப்புத்தளை: எம். எஸ். பொன்னையா 2-00—வறக்கபொல்லா: பி. லீயோவலிரீஸ் 2-00—மடுல்சீனு: ஜே. எஸ். மாட்டீன் 2-00, கதிரவேல் 1-00—இளவாலை: அ. பி. இராசநாயகம் 10-00—அக்கரபத்தனை: ஏ. பி. நடறூஸ் 1-00, எல். ஏ. எஸ். தோமஸ் 1-00—உடப்புசலாவை: எஸ். எம். யோசேப்பு 10-00—பொல்காவலை: அ. மரியம்மா -50—ஏழாலை: ஐ. வரப்பிரகாசம் 3-00, ஏ. அன்னபாக்கியம் 3-00, பி. அம்புறோஸ் 2-00, வ. பவுலினு 1-00, கபிரிகேற்பிள்ளை அன்னம்மா 2-00—மயிலங்காடு: அ. இ. சந்தியாப்பிள்ளை 2-00—நனுஓயா: ஏ. எஸ். செபஸ்ரியன் 15-00—தலவாக்கொல்லை: தேவசகாயம் 5-00—நனுஓயா: ஏ. அருளானந்து 5-00—புத்தளம்: பி. எம். சந்திரசேகரா 1-00—அப்கொற்: எஸ். பேர்னுட்பீற்றர் 2-00—விண்டுலா: எஸ். ஜோண் 1-00—கல்கமுவா: ம. சி. அந்தோனிப்பிள்ளை -50, ச. சூசைப்பிள்ளை 1-00—பண்டாரவளை: எஸ். வி. மரியறோஸ்பீற்றர் 3-00—குருனகல்: ஜி. எஸ். சின்னத்துரை 1-00—மாருவில்: பிரூங் அன்ரன் 10-00—நெடுந்தீவு: எஸ். [illegible] -50—அப்கொற்: மிசெஸ். பேர்னுட்பீற்றர் 1-00—புத்தளம்: மிஸ். ஆர். எம். பி. பிள்ளை 4-00—சுண்டிக்குளி: கே. கே. 1-00—பாண்டியன்தாழ்வு: எஸ். அந்தோனிப்பிள்ளை 1-00—கண்டி: மாட்டீன் பிரான்சீஸ் 1-00—கல்கமுவா: சி. செபஸ்தியாப்பிள்ளை 1-00—மஸ்கேலியா: தோமஸ் சூசை 1-00, ம. அந்தோனிப்பிள்ளை 2-00—காக்காப்பள்ளி ஆர். எஸ். ஆர். காசிஐயா 2-00—இல்லா: எஸ். ஆர். மரியாம்பிள்ளை 5-00—அக்கரபத்தன: எச். ஆர். சில்வானுஸ் 1-00—நுவரெலி: லட்சுமணன்வள்ளியம்மை 7-50—அளவெட்டி: தீ. லூயிசாப்பிள்ளை 4-00—பண்டாரவளை: ஜே. எஸ். பீற்றர் 2-00—நாரந்தனை: எஸ். எஸ். 1-00—மாதகல்: சூ. சபீனு 1-00—மஸ்கேலியா: ம. வஸ்தியாம்பிள்ளை 2-00

---

### யாழ்ப்பாண நூதனசாலை

இலங்கை நூதனப்பொருட்காட்சிச்சாலைகளின் தற்காலிக தலைவர் திரு. எம். டி. இராகவன் அவர்கள் கீழ்க்கண்ட செய்தியை விடுத்திருக்கிறார்: வடமாகாண கலாசாரத்தின் சின்னமாக யாழ்ப்பாணத்தில் நூதனபொருட்காட்சிச்சாலை ஆரம்பிக்கப்பட்டுஇரண்டு வருடகாலமாகிறது. நவீனமுறையில் அதன் கட்டிடம் நிறுவப்படும்வரையில் அது யாழ்ப்பாணப் பெருந்தெருவிலே 7-ம்நம்பர்க்கட்டிடத்தில் இருந்துவருகிறது. இந்த ஸ்தாபனத்தின் வளர்ச்சியும், விருத்தியும் பொதுவாக இலங்கைமக்களின் உதவியையும், சிறப்பாக வடமாகாண வாசிகளின் உதவியையும், ஒத்துழைப்பையும் பொறுத்திருக்கின்றன. வடமாகாணசம்பந்தமான பூர்வீக பொருட்களையோ அல்லது கலாசாரப்பொருட்களையோ நன்கொடையாக அல்லது கடனுக இந்தநூதனபொருட்காட்சிச்சாலைக்கு அனுப்பிவைத்தால் அவைகள் நன்றியறிதலுடன்ஏற்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேத வினவிடை

— IV —

சுதனானவர் எங்கள் அவதரித்தவர்

## (2) கிறீஸ்துவின் நடைபடி

44. யேசுக்கிறீஸ்துநாதரின் நடைபடி என்றால் என்ன ?

அவர் இவ்வுலகில் நடத்திய சீவியமும் அனுசரித்த புண்ணியங்களுமாம்.

45. நாம் ஒருவருடைய நடைபடியிலிருந்து அவர் தம்மைப்பற்றித் தாவா செய்கிறது உண்மையோ இல்லையோ என்று அறியலாமா ?

ஆம். ஒரு மரத்தின் கனியிலிருந்து அதைப்பற்றி அறியுமாப்போல, ஒருவருடைய நடைபடியிலிருந்து அவரைப் பற்றி அறியலாம்.

"அவர்களுடைய கனிகளைக் கொண்டே அவர்களை அறிவீர்கள்"—மத். VII. 20.

46. யேசுநாதருடைய நடைபடியின் பிரதான குணங்கள் எவை ?

மாசில்லாமை, இரக்கமான தயவு, ஆழ்ந்தபுத்தி, மாறாததைரியம், தன்னய மறுப்பு, செல்வாக்கு முதலியனவாம்.

47. அவரை ஏன் மாசில்லாதவர் என்கிறோம் ?

ஏனெனில், அவருடைய சீவியம் முழுத்திலும் ஒரு குற்றமும் அவரில் கண்டுபிடிக்க அவருடைய சத்துராதிகளுக்குத்தானும் ஏலவில்லை.

"என்னிடத்திலே பாவம் உண்டென்று உங்களில் எவன் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்?"—அரு. VIII. 46.

"குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக் கொடுத்தேன்"—மத். XXVII. 4.

"இவரோ ஒரு பொல்லாப்புஞ் செய்தவரல்ல"—லூக். XXIII. 41.

48. அவரை ஏன் இரக்கம் தயவு உள்ளவர் என்கிறோம் ?

ஏனெனில் அவர், தம்முடைய போதனையினாலேயும் கிரியையினாலேயும், எளிய எழியவர்கள் சிறியவர்கள்மேலும், பாவிகள் நோயாளர் மட்டிலும் இரக்கமும், தவறுகிறவர்கள் பெலவீனர் பேரில் பொறுமையும் உள்ளவர் எனக்காட்டி, எல்லோருக்கும் நன்மை செய்துகொண்டு வந்தார்.

"நீ உத்தமனாயிருக்க விரும்பினால், போய், உனக்குள்ளவைகளை விற்றுத் தரித்திரருக்குக் கொடு"—மத். XIX. 21.

"பாலர்களை நம்மிடத்தில் வரவிடுங்கள்"—மாற். X. 14.

"உங்களுக்குள்ளே பாவமில்லாதவன் இவள்மேலே முதலாவது கல்லெறியக்கடவான்"—அரு. VIII. 7.

"வருந்திச் சுமை சுமந்திருக்கிறவர்களாகிய நீங்களெல்லோரும் என் அண்டையில் வாருங்கள், நான் உங்களைத் தேற்றுவேன்"—மத். XI. 28.

"ஏழுதரமாத்திரமல்ல, ஏழு எழுபது தரம் மட்டும் [மன்னிக்கவேணு]மென்று உனக்குச் சொல்லுகிறேன்"—மத். XVIII. 22.

"மனமானது வேகமுள்ளதுதான்; மாம்சமோ பலவீனமுள்ளது"—மாற். XIV. 38.

49. அவரை ஏன் ஆழ்ந்த புத்திசாலி என்கிறோம் ?

ஏனெனில் அவர் தமது பேச்சிலும் கிரியையிலும் மிகவும் புத்தியாய் நடந்து, உன்னத வேத சத்தியங்களை ஒவ்வொருவருக்கும் தக்கவிதமாய்ப் போதித்தது மாத்திரமல்ல, தமது சத்துராதிகளுடைய தந்தரமான கேள்விகளுக்கு ஏற்ற மறுமொழி கொடுத்து அவர்கள் மௌனமாய் இருக்கச் செய்தார்.

"அவருடைய வாக்கைக் கேட்ட யாவரும் அவருடைய ஞானத்தையும் மாறுத்தாரங்களையும் பற்றிப் பிரமித்துக்கொண்டிருந்தார்கள்"—லூக். II. 47.

"சனங்களுக்கு முன்பாக அவருடைய பேச்சிலே அவர்கள் குற்றம் பிடிக்கக் கூடாதிருந்ததுந் தவிர, அவர் சொன்ன பதில்மொழியின் பேரிலும் ஆச்சரியப்பட்டு, வாயடைத்துப் போனார்கள்"—லூக். XX. 26.

"வேதபாரகரில் சிலர் மறுமொழியாக, அவரை நோக்கி: போதகரே, நன்றாய்ச் சொன்னீர் என்றார்கள். அதன்பின் அவர்கள் அவரிடத்திலே யாதொன்றையும் கேட்கத் துணியவில்லை"—லூக். XX. 39-40.

50. அவரை ஏன் மாறாத தைரியமுடையவர் என்கிறோம் ?

ஏனெனில் அவர் வல்லமையுள்ள அதிபதிகளுக்கும் பிரபுகளுக்கும் அஞ்சாமல், கள்ள ஞானிகளையும் தெய்வத் துரோகிகளையும் எதிர்த்து, கொடூரமான வாதைகள் மத்தியில் ஒருவரினுமிருந்து இரக்கம் கெஞ்சாமல், தமது போதனையை மரணமட்டும் மறுக்காமல் இருந்தார்.

"நீங்கள் போய்... அந்த நரிக்குச் சொல்லுங்கள்"—லூக். XIII. 32.

"பரலோகத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஓர் அதிகாரமும் இராது"—அரு. XIX. 11.

"கள்ளஞானிகளாகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ கேடு"—மத். XXIII. 14.

"சிறுகயிறுகளால் ஒரு சாட்டைபோல் பின்னி, அவர்களெல்லாரையும் துரத்தினர்"—அரு. II. 15.

"பிலாத்து அவரை நோக்கி: நீ இராசாவோ என்றான். யேசுநாதர் மாறுத்தாரமாக: நான் இராசா என்று நீரே சொல்லுகிறீர் என்றார்"—அரு. XVIII. 37 & மாற். XIV. 61-62.

51. அவரை ஏன் தன்னய மறுப்பவர் என்கிறோம் ?

ஏனெனில் அவர் தாம் தேவகுமாரன் என்று ஒத்துக்கொண்டாலும் எப்போதும் தரித்திரனாகவும் சாந்தம் தாழ்ச்சியுடையவராகவும் இருந்து, தன் நயத்தை ஒருபோதும் விரும்பாமல், தம்மைச் சிலர் இராசாவாக்க எத்தனித்தபோதும் மறைந்துவிட்டார்.

"நரிகளுக்கு வளைகளும், ஆகாயப் பறவைகளுக்குக் கூடுகளுமுண்டு; மனுமகனுக்கோ தலைசாய்க்க இடமில்லை"—மத். VIII. 20.

"அவர் சீஷர்களுடைய பாதங்களைக் கழுவவும், தாம் இடையில் கட்டியிருந்த துண்டால் துடைக்கவும் தொடங்கினர்"—அரு. XIII. 5.

"அவர்கள் தம்மை இராசாவாக்கும்படி பலவந்தமாய்த் தம்மைப் பிடிக்க வரப்போகிறார்களென்று யேசுநாதர் அறிந்து, விலகிப்போனார்"—அரு. VI. 15.

52. அவரை ஏன் செல்வாக்குள்ளவர் என்கிறோம் ?

ஏனெனில் அவர் படிக்காவிட்டாலும் மனிதரை இலேசாகத் தன் வசமாக்கவும், சகலத்தையும் விட்டுத் தம்மைப் பின்தொடரச் செய்யவும், தமக்காகப் பிராணனைமுதலாய்க் கொடுக்க ஆயத்தமாயிருக்கப்பண்ணவும் ஏலுமானவர்.

"நான் அத்திமரத்தின் கீழே உன்னைக் கண்டேனென்று உனக்குச் சொன்னதினால் விசுவசிக்கிறாயே"—அரு. I. 50.

"உடனே அவர்கள் தங்கள் வலைகளை விட்டுவிட்டு, அவரைப் பின்சென்றார்கள்"—மாற். I. 18.

"தோமையார் தம்முடைய உடன் சீஷர்களைப் பார்த்து: அவரோடு கூட மரிப்பதற்கு நாமும் போவோமாக என்றார்"—அரு. XI. 16.

53. இப்படிப்பட்ட குணங்களையுடைய யேசுநாதர் சாதாரண மனிதனாய் இருக்கமுடியாது என்று அவருடைய சத்துராதிகளுக்குள் சிலர் ஏற்றுக்கொண்டார்களா ?

ஆம். அவரை மறியலாக்குகிறதற்காக அனுப்பப்பட்ட சேவகர் அவரைப்போல ஒருபோதும் எவனும் போதிக்கவில்லை என்றார்கள். யூதருடைய சங்கத்தார் அவரைச் சும்மாவிட்டால் எல்லோரும் அவரைப் பின்தொடருவார்கள் என்றார்கள். பிலாத்து அவரை நீர் எவ்விடமிருந்து வந்தவர் என்று கேட்டான். அவரைச் சிலுவையில் அறைவித்த செந்தூரியன் அவர் மரித்தவிதத்தைக் கண்டு அவர் மெய்யாகவே தேவகுமாரன் தான் என்றான்.

54. அவரைப் பின்தொடர்ந்த சீஷர்கள் அவரைப்பற்றி என்ன சொன்னார்கள் ?

அவர் மெய்யான தேவ குமாரனாகிய கிறீஸ்துவென்று ஏற்றுக்கொண்டார்கள்.

"நத்தனயேல்: ரபீ, நீர் சர்வேசுரனுடைய குமாரன், இஸ்ராயேலின் இராசா என்றான்"—அரு. I. 49.

"சீமோன் இராயப்பர்: நீர் கிறீஸ்துவானவர், சுயஞ்சீவிய சர்வேசுரனுடைய குமாரன் என்றார்"—மத். XVI. 16 & அரு. VI. 70.

"மார்த்தம்மாள்: ஆம், ஆண்டவரே, நீர் கிறீஸ்துநாதரென்றும், இவ்வுலகத்திற்கு எழுந்தருளிவந்த சீவிய கடவுளின் குமாரனென்றும் விசுவசித்திருக்கிறேன் என்றாள்"—அரு. XI. 27.

"தோமையார் அவருக்கு மறுமொழியாக: என் ஆண்டவரே, என் தேவனே என்றார்"—அரு. XX. 28.

55. யேசுநாதர் தாமே தம்மைப் பற்றி என்ன சொன்னார் ?

அவர் தாம் தேவகுமாரனும் பிதாவோடு ஒரே சருவேசுரனும் என்று சொன்னார். அப்படிச் சொன்னபடியால்தான் அவரைக் கொன்றார்கள்.

"பெரிய குரு அவரை வினவி: ஸ்துதிக்கப்பட்ட சருவேசுரனுடைய குமாரனாகிய கிறீஸ்து நீதானோ என்று கேட்க: யேசுநாதர் அவனை நோக்கி: அவர் நான்தான் என்றார்"—மாற். XIV. 61-62.

"நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்"—அரு. X. 30.

"யூதர்கள்: சட்டத்தின்படியே இவன் சாகவேண்டும். ஏனெனில் தன்னைச் சருவேசுரனுடைய குமாரனாக்குகிறான் என்றார்கள்"—அரு. XIX. 7.

56. யேசுநாதர் தாம் சருவேசுரன் என்று தாவா செய்ததை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டுமா ?

ஆம், ஏனெனில் இப்படிப்பட்ட குணங்களை உடையவர் அனுப்பப்படக்கூடிய மந்தருமல்ல; மற்றவர்களை அனுப்பக்கூடிய பாதகருமல்ல.


# "புதுநன்மைக்கான பாடத்திட்டம்"

கத்தோலிக்க பாடசாலைகளிலே பிள்ளைகளைப் புதுநன்மைக்கு முஸ்திப்புச் செய்வதற்கென்றே பிரதானமாக இப்புத்தகம் எழுதப்பட்டது. இந்த முஸ்திப்பு இருவருடங்களில் ஆகவேண்டியவிதமாய் இதிலே தரப்பட்டிருக்கிறது.

ஒவ்வோர்வருடப் படிப்பின்விஷயமும் வாரம் ஒன்றுக்கு 5 பாடங்களாக 35 வாரங்களுக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. விளக்கிக்காட்டவேண்டிய ஒவ்வோர்வாரத்தின் பாடப்பொருளும் அதன்பிரதான கருத்தும், அந்தந்தவாரத்தின் காரியக்கிரம சூசிகையின்மேலே தரப்பட்டிருக்கின்றன.

கீழேயுள்ள ஐந்து பத்திகளிலும் (1) ஒவ்வோர் வாரத்தின் அடிப்படையான விஷயமும் (2) அந்தந்தநாட்பாடத்தின் பொருளுக்கு இசைந்த வேதாகமசரிதைகளும் (3) மனப்பாடமாகப் படிக்கவேண்டிய ஞானோபதேசப் பாடங்களும் (4) படிக்கவேண்டிய செபங்களும் (5) வியாக்கியானத்தின் சுருக்கமும், அனுசாரணைப்புத்திமதிகளும் அடங்கியிருக்கின்றன

பிள்ளைகளுக்கு ஞானோபதேசம் இலகுவில் விளக்கமாகப் படிப்பிக்க இந்தப்பாடத்திட்டம மிகவாய்ப்பானது. ஞானோபதேசபாடத்தில் அவர்களுக்கு மிகுந்தஆவலையும் மேலானகரிசனையையும் உண்டுபண்ணக்கூடியது.

குருமார், ஆசிரியர், உபதேசிமார், மரியாயின்சேனையார், மற்றும் கத்தோலிக்கசேவையில் ஈடுபட்டவர்களுக்கெல்லாம் ஓர் அருமையான கைத்துணை இதுவாகும்.

பிரதி விலை சதம் 90.

கிடைக்குமிடம் :
மனேஜர்
அர்ச்: சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை,
யாழ்ப்பாணம்.


## பட்டுக் கைத்தொழில்

இலங்கையிலே பட்டுப்பூச்சிவளர்ப்பதற்கான மல்பெறிச்செடிகள் இதுவரை 150 ஏக்கர்நிலத்தில் உண்டுபண்ணப் பெற்றிருக்கின்றன. தற்போது நடைமுறையில்இருந்துவரும்மூன்றுவருடத் திட்டப்படி 5,000 ஏக்கர்நிலத்தில் மல்பெறிச்செடிகள் உண்டுபண்ணப்படவேண்டியன. ஏற்கனவே புத்தூர், லுனுகலை, பேராதனை எனுமிடங்களில் மூன்றுபட்டுப்பூச்சிப்பண்ணைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலே விசேஷபயிற்சிபெற்ற மூன்றுவிஞ்ஞானசாஸ்திரபட்டதாரிகளால் இம்மூன்று பண்ணைகளும் பரிபாலிக்கப்பட்டுவருகின்றன. இலங்கையிலே உற்பத்திசெய்த பட்டுநூல்கொண்டு இந்தியாவிலேயே பயிற்சிபெற்ற ஆறுபட்டுநெசவு தொழிலாளர் பட்டுப்புடவைகளை நெசவுசெய்துவருகின்றனர். இன்னும் மூன்றுவருடங்களுக்கிடையில் இலங்கைக்குத்தேவையான பட்டுமுழுவதையும் கைத்தொழிற்பகுதி கொடுக்கக்கூடியதாகுமென்று பட்டுப்பூச்சிவளர்ப்பதில் நிபுணரான திரு. கே. ரி. ஆச்சியா கூறுகின்றார். பட்டுப்பூச்சிநூற்கும் உருண்டையிலிருந்து பட்டுநூலைச் சுற்றியெடுப்பதற்கென்று அரசினர்சமீபத்திலே ஸ்ரீம்யந்திரம்ஒன்றை விலைக்கு வாங்கவிருக்கின்றனர்.

❀ இத்தாலிய சமாதான உடன்படிக்கையிலே செய்யப்பட்டுள்ள இராணுவ விலக்குகள் அடுத்தவருடத்துடன் நீங்குகின்றன. அதனால் இத்தாலியஅரசு அடுத்த தைமாசமுதல் இரண்டரைலட்சம் போர்வீரரைக்கொண்ட ஓர்சேனையையும், குறுயிசர்கள், டிஸ்திரோகளைக்கொண்ட ஓர் கடற்படையையும் ஆக்கத் தீர்மானித்திருக்கிறது.

❀ ஸ்பானிய தேசத்திலே பரிசுத்தமான வாழ்க்கைநடத்திவந்து 1943-ம் ஆண்டு ஆடிமாதம் 15-ந்திகதி தமது 41-ம் வயசிலே பரமபதம் அடைந்தவரான இசிடோரோ சோர்சானோ எனும் எஞ்சினீயருக்கு முத்திப்பேறுபட்டம் சூட்டுவிப்பதற்கான இயக்கம் ஸ்பெயினிலே ஆரம்பமாகியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறுத்தெறிந்த அருள்மாலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுபோய்ச்சேர்த்தன. அம்மூலையில் இருந்த சாராயப்போத்தலைக் கையில்எடுத்தான். மழமழவென்று வாயில்ஊற்றினன். வீடுமுழுவதும் ஒரேநாற்றமாகிவிட்டது. அவன்கண்கள்சுழன்றன.

பின்னிக்கொள்ளுங் கால்களைச் சாவதானமாகத் தூக்கிவைத்துக்கொண்டு ஞானம்மாளின்முன்வந்து "சாப்பிடஎன்னடி வைத்திருக்கின்ருய்" என்று இரைந்தான்பெனடிக்ற். ஞானம்மாள்எழுந்தாள். "ஒன்றுமில்லையே; குழந்தைகூடப்பட்டினி; இவ்வளவுநேரமும் உங்களைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம்" என்று கனிந்த மொழியிற் பதிலிறுத்தாள் ஞானம்மாள். "என்னசொல்லுகிருய்" என்றுசொல்லிப் பற்களை நெறுநெறெனக் கடித்துக்கொண்டு அவள்கையை இறுகப்பிடித்தான். 'தன் கன்னஎலும்புகளை அவரதுமுரட்டுக்கரம் இன்று பதம்பார்க்கப்போகிறது' என்றுஏங்கி வெடவெடத்துப்போனள் ஞானம்மாள். "கொடு அந்தச்செபமாலையை" என்றுசொல்லியபடி அவள் கையிலிருந்த செபமாலையைப் பிடுங்கினன். "நீ இந்தச்செபமாலையைச் செபிக்கப்போய்த்தான் தரித்திரம் நம்மைவிட்டுப் போகுதில்லை" என்று சொல்லியபடி அதைச்சுக்குநூருய்அறுத்து அவள்முகத்தில் வீசியெறிந்தான்.

சித்திரப்பதுமைபோல அசைவற்றுநின்ற ஞானம்மாள் தன் கணவனுக்குப் பொறுத்தல் கொடுக்கவேணுமென்று பரிசுத்ததேவதாயாரைத் தன்மனமார வேண்டிக்கொண்டு நின்ருள். அவள் கண்களில் நீர் ஆருய்ப்பெருகி ஓடினது.

பெனடிக்றின்கால்கள் அவனைச்சுமந்துநிற்கமறுத்தன. தள்ளாடித்தள்ளாடிச்சென்று கட்டிலிற் தொப்பென்றுவிழுந்தான். ஞானம்மாள் சிறிதுநேரத்தால் தன்கணவன் அறுத்தெறிந்த செபமாலைமணிகளையும், துண்டுகளையும் தேடிப்பொறுக்கியெடுத்து விளக்குவெளிச்சத்தினருகில் கொண்டுசென்று ஒன்ருகச் சேர்த்துக் கோத்துக்கொண்டிருந்தாள். பெனடிக்ற் அவள் பக்கமாகத் தன் தலையைத்திருப்பித் தன்சுழலும்கண்களை மிகவும்சிரமத்துடன் நிலைப்படுத்தித் தன்மனைவியை நன்ருக உற்றுக்கவனித்துக்கொண்டிருந்தான். கைவிரல்களினுலும், பற்களினுதவியோடும் மிகவுங் கஷ்டப்பட்டுச்செபமாலையை ஞானம்மாள் சரிப்படுத்திக்கொண்டிருந்ததை அவதானித்தான். விளக்குவெளிச்சத்தின்முன்னல் அவளது நிர்மலமானமுகத்தை நன்ருகஉற்றுநோக்கினன். பூரணசந்திரன் கார்மேகத்தினூடே தோன்றுவதுபோல அவளது பொலிவுள்ளவதனம்சோகத்திரையினுள்ளே தோன்றியது. முத்துப்போன்ற நீர்த்துளிகள் அவள்கண்களிலிருந்து உதிர்ந்து சிவந்தகன்னங்களால் உருண்டு அவளது கொவ்வையிதழ்களை நனைத்துக்கொண்டிருந்தன. இவைகளைக்கவனித்த பெனடிக்ற் தன்மயக்கமான உள்ளத்தில் எதையோ எண்ணியபடி கொறட்டைவிட்டு நித்திரையுள் ஆழ்ந்துவிட்டான்.

(தொடரும்)

Mal. No. 437. Engels.

## புராதன இந்திய ஞானம்

பொதுவாக இந்தியரைப்பற்றி எமக்குள்ளஅறிவு சொற்பம்மாத்திரமே. ஓர் விதியாக ஆடம்பரவைபவங்கள் நடந்தேறும் சந்தர்ப்பங்களிலே தங்கள் போரான இறகுச் சிராக்களை அணிந்துகொள்ளுகின்ற செந்நிறத்தோலுடையவர்கள் என்பதேயல்லாது மற்றப்படி மிகஅதிகமாக அவர்களைப்பற்றி நாம் அறிந்துகொள்வதில்லை.

அங்ஙனமாயினும் அநேகஇந்திய சாதிகள் அதிகம்உந்நத நாகரீகமுடையனவென்று தங்களை வீம்புபாராட்டக்கூடியனவாய்இருக்கின்றன. மெக்சிக்கோவிலே ஸ்பானியர்கள்கால்வைத்தகாலத்திலே அதிகமாகஅங்கு வசித்திருந்த அஸ்ரெக்சாதியாரினதும், இங்காஸ்சாதியாரினதும் கலைகள் உண்மையாக அதிகம்உச்சநிலையை அடைந்திருந்தன. ஆனல், ஏனையதுறைகளிலும் அவர்களின்அறிவு மட்டுப்பட்டிருந்தது. மத்திய, தென் அமெரிக்காவில் சஞ்சரித்திருந்த இந்தியர்கள் மூலிவகைகள், மருத்துப்பூண்டுவகைகளைப்பற்றிய அறிவிலே மிகப்பிரசித்திபெற்றவர்கள். இந்தவிசேஷப்பட்ட சாஸ்திரஅறிவானது காலாகாலமாகத் தலைமுறைதலைமுறையாக அவர்களுக்குக்கொடுபட்டுவந்திருக்கிறது. ஏறக்குறைய ஒவ்வொருநோய்க்குமே அததற்குரிய யுக்தமான மூலிவகைகள், மருத்துப்பூண்டுவகைகளை அவர்கள்நன்கறிவார்கள். சிலவருடங்களின்முன் பிரசுரமான புத்தகம்ஒன்றிலே 400-க்குக்குறையாத சுதேசமருத்துப்பூண்டுவகைகள், மூலிவகைகள் தரப்பட்டிருக்கின்றன.

"மன்ஸனில்லோ" என்ற ஓர்வகைத் தேயிலைபோலும் மருத்துப்பூண்டுகள் அரோசிகத்தை உண்டுபண்ணும் வயிற்றுநோய்க்குக் குணந்தரும் ஓர் மருந்தாகவும், "லஸ்கோ" எனும் உலரவைத்த ஓர்செடியானது "றற்றின் சினேக்" எனும் ஓர்பாம்புக்கடிக்கு அல்லது தேள்கடிக்கு ஓர்களிம்புமருந்தாகவும் உபயோகிக்கப்படுகின்றன. எலும்பிலேற்படும் முறிவுதறிவுகளையும், சரீரத்தில்உண்டாகும் காயங்களையும் ஓர்வித முள்இலைகள்கொண்டு அவர்கள் குணமாக்குவது உள்ளபடியே மிகவும்போரான சிகிச்சையாகும்.

இன்னும்புராதன "இன்காஸ்" சாதியார் கையாளும் ஒருமருந்து உலகப்பிரசித்திபெற்றதாகிவிட்டது. அதாவது சிங்கோனமரப்பட்டைகொண்டு நடத்தும் சிகிச்சையேயாகும். அதன் குணந்தரும் சக்திகளைக் கண்டுபிடித்தவர்கள் இந்தியர்களே. இந்நாள்வரையில் இந்தஇயற்கைவிளைபொருள்அபாயகரமான மலேரியாச்சுரங்களுக்கு அதிகம் விசேஷப்பட்ட ஓர் மாற்றுமருந்தாய் இருந்துவருகிறது.

தற்போது இல்லாதொழிந்துபோன சர்வதேசசங்கத்தின் நிபுணத்துவம் வாய்ந்த மலேரியாக்கொம்மிற்றிதானும் 1938-ம்ஆண்டு பிரசுரமான ஓர்அறிக்கையிலே, மலேரியாவால் ஓர்தரம் பீடிக்கப்படுமிடத்து 5 முதல் 7 நாட்கள்வரையில் தினமும் 15 முதல் 20 கிறேயின் குயினைன்வரையில் அருந்துவதும், மலேரியாகாலமுழுவதிலும்அதுவாராமல் தடுப்பதற்காகத் தினமும் 6 கிறேயின் குயினைன் அருந்துவதும் அதிகஞ்சிறந்[illegible]திருக்கிறது.

## மரியாயின் சேனை

(முன்தொடர்ச்சி)

### இரண்டாம் அதிகாரம்
### சேனை அங்கீகாரம் பெற்றது.

மரியாயின் சேனை திருச்சபையின் அங்கீகாரம் பெற்றிருக்கிறது. 1933-ம் ஆண்டு புரட்டாதிமாசம் 16-ந் திகதி 11-ம்பத்திநாதபாப்பானவர் மரியாயின் சேனைக்குக் கூறிய ஆசீர்வசனமாவது: "மரியாயின்சேனை செய்துவரும் இந்த உன்னதமான ஊழியத்தை அதிகம் விசேஷவிதமாக ஆசீர்வதிக்கிறேம். அதன்நாமமே அதைஆதரித்துப் பேசுகிறது. அதன்துவசத்தில் தோன்றும் அமலோற்பவநாயகியின் உருவம் மேலானபரிசுத்தவிஷயங்களைப் பிரஸ்தாபிக்கிறது. பரிசுத்தகன்னிமரியம்மாள் திவ்வியஇரட்சகருக்கும், நம்மெல்லோருக்கும் மாதா அவள் சிலுவையடியில் நமக்கு மாதாவானதினல் அவள் நம்முடையஇரட்சணியத்தில் ஒத்துழைக்கிருள். அந்தஒத்துழைப்பின் நூற்ருண்டுவிழாவையும், மரியாள் அனைவருக்கும்தாயான நூற்ருண்டு விழாவையும் நிகழும்வருடம் கொண்டாடுகிறேம். நீங்கள் செய்துகொண்டிருக்கும் அப்போஸ்தலத்துவ செபங்களிலும், ஊழியங்களிலும் இன்னும் அதிகமான ஊக்கம்செலுத்த வேண்டுமென்று உங்களுக்காகப் பிரார்த்திக்கிறேம். அவ்வாறுசெய்வதினல் சருவேசுரன்உங்களையும் இரட்சணியத்தில் ஒத்துழைப்பவர்களாக்குவார். இரட்சகருக்கு நன்றிசெலுத்த இதைவிடச் சிறந்தவழிவேறுகிடையாது" என்பதே.

மேலும் 1939-ம்ஆண்டு ஆனிமாசம் 12-ந்திகதி நமது பரிசுத்தபிதாவாகிய 12-ம்பத்திநாதர் பாப்பாசர் கருதினல் பித்ஸாரோ ஆண்டவர் மூலமாய் மரியாயின்சேனைத் தலைவருக்கு எழுதியனுப்பிய ஓர் திருமுகத்திலுள்ள சில வசனங்களை இங்கு தருகிறேம்.

"இச்சேனை பரிசுத்தஸ்தானத்தின் மீது பக்திவிசுவாசம் கொண்டிருக்கிறதென்றும், மேற்றிராணிமார்களின் கட்டளைகளையும், விருப்பங்களையும் எப்பொழுதும் பிரமாணிக்கமாய்ச் சிரமேற்கொண்டு நிறைவேற்றிவைக்கப் பயபக்தியானகருத்துக் கொண்டிருக்கிறதென்றும் உறுதிகூறுவதற்காக, தாம் அர்ச். இராயப்பர் பத்திராசனத்திற்கு உயர்த்தப்பெற்ற இத்தனை நாட்களுள் கிறீஸ்துநாதரது பிரதிநிதியின் பாதாரவிந்தங்களைத் தாங்களும், ஸ்ரீமான் டவ்ப் அவர்களும் தேடிவந்து தங்கள் இருவருக்கும் தம்மீதுள்ள பட்சமும் தாழ்ச்சியும்பொருந்திய பக்தியை வெளிப்படுத்தியதை நினைவுகூர்ந்து பரிசுத்ததந்தைஅவர்கள் மனமகிழ்ந்தார்கள். பின்னர் தந்தையவர்கள் மரியாயின்சேனை உத்தியோகஸ்தர்களுக்கும், அங்கத்தினருக்கும் தமது அப்போஸ்தொலிக்கஆசீர்வாதத்தை அருளுவதாக அவர்களுக்குத் தெரிவிக்குமாறும், சருவேஸ்பரனின் அதிமிக தோத்திரத்துக்காகவும், பூலோகத்தில் கிறீஸ்துநாதரின் இராச்சியத்தைப் பரப்புவதற்காகவும் இன்னும் பெரியமுயற்சிகளை மேற்கொள்ள அவர்களை உற்சாகப்படுத்துமாறும் தெரிவிக்கிருர்கள்" என்பதே. மேலும் அத்திருமுகத்திலதானே கருதினல் ஆண்டவர் தமது சொந்த அபிப்பிராயத்தையும் வெளிப்படுத்தியிருக்கிருர். அவர் சொல்வது: "நாமே மாதாவின் உன்னத கொடியின்கீழ் சேவிக்கும் சேனையாளரின் ஊழியங்களை மெய்யாகவே வெகுவாக வியந்துபாராட்டுகிறேம். அவர்கள் அயலார்மீதுள்ள அன்பினுலும், அப்போஸ்தலத்துவத்திற்கு ஆணிவேராயிருக்கின்ற ஆத்தும இரட்சணியதாகத்தாலும் ஏவப்பட்டு இவ்விரண்டு பேர்களாய்ச்சென்று தங்கள்தங்கள் அருமையான ஞானதரும அலுவல்களைச செய்கிருர்கள். மிஷன் நாடுகளிலே ஆபிரிக்காவிலும், இந்தியாவிலும் அவர்கள் செய்துவரும் வேலைகளை அவர்கள் வேறுநாடுகளில் செய்யும் வேலைகளை விடஅதிகம் மெச்சுகிறேன். அந்தநாடுகளில்அவர்கள்பல மேற்றிராணிமார்களின் ஆதீனத்திற்குக் கீழ்ப்பட்டுஅப்போஸ்தொலிக்க அலுவல்கள்செய்துவருகிருர்கள். இந்தஊக்கமுள்ள ஊழியரின்உழைப்பை யேசுக்கிறீஸ்துநாதர் ஆசீர்வதிப்பாராக! அவருடைய பரிசுத்ததாயார் அவர்களை எப்பொழுதும் தமது இருதயத்தில் கொண்டிருப்பாளாக" என்பதே.

இப்படியே மரியாயின்சேனை திருச்சபையின் அங்கீகாரம் பெற்றிருக்கிறது. அதுபோலவே ஒவ்வொரு பிரெஸீடியங்களும் (Praesidium) அங்கீகாரம்பெற்ற சேனைநிருவாகசபைகள் ஒன்றின்மூலம் சேனையோடு இணைக்கப்படல் வேண்டும். அல்லவிடின் சேனைஅங்கத்துவமில்லை. [illegible] முழுவதிலுமுள்ள இச்சேனைகள் ஒவ்வொன்றும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றி வேருேர் அதிகாரத்தில் சேனையின் பிரமாணிக்கம் என்றபிரிவில் விபரித்துக்காட்டுவோம்.

(தொடரும்)

### கல்லூரி நூற்றுண்டுவிழா

யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியின் நூற்ருண்டுவிழா அடுத்து நிகழும் 1950-ம் ஆண்டு மாசிமாதத்திலே கொண்டாடப்படவிருக்கிறது. இம்மாசம் 2-ந்திகதி கல்லூரித்தலைவர் அதிவண. ரி. எம். எவ். லோங்சுவாமியவர்கள் தலைமையில் நடந்தேறிய நூற்ருண்டுவிழாக் கொம்மிற்றிக்கூட்டம் ஒன்றிலே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இவ்விழாக் கொண்டாட்டத்திலே விசேஷப்பட்டவற்றுள் மாசிமாதம் 12-ந்திகதிவரையில் நடைபெறும் "காணிவ"லும் ஒன்ருயிருக்கும்.

### இளைப்பாறிய பத்திராசிரியர்

கொழும்பு அதிமேற்றிராசன வெளியீடாகிய "கதலிக் மெசெஞ்சர்" பத்திரிகையின் உதவியாசிரியராய் விளங்கியிருந்தவரான ஸ்ரீ டி. ஜே. பி. குறுப்புஅவர்கள் நாற்பத்திரண்டுவருடகாலம் இப்பத்திரிகையில் மிக்கதிறமையுடன் தொண்டாற்றியபின்சென்ற வாரத்திலே தம்பதவியிலிருந்து இளைப்பாறினர். பரமபதம் அடைந்தவரான வண. பகமுனைச் சுவாமியவர்கள் அப்பத்திரிகையின் ஆசிரியராகவிருந்தகாலத்திலேஸ்ரீ குறுப்புஅவர்கள் 1908-ம் ஆண்டு அதில் ஈடுபட்டுக் கடமையாற்றி வரலாயினர். பின்னர் அதன் உதவிஆசிரியர்களில் ஒருவராய் வந்தபின்னர் கத்தோலிக்க சமயசம்பந்தமானகருமங்களிலே அஞ்சாதவீரத்துவத்துடன் தமது ஆணித்தரமான எழுத்துகளாலே அருஞ்சேவையாற்றிவந்தார். கல்விசம்பந்தமான விஷயங்களில் மிகவும் முக்கியத்துவம்வாய்ந்து விளங்கினுர். இவர் திருச்சபைக்கு ஆற்றியுள்ள மகத்தான சேவைகளைப் பாராட்டிப் பரிசுத்தபாப்பரசர் 1947-ம் ஆண்டு திருச்சபைக்கும் பாப்பரசருக்கும் சிறப்பாகத் தொண்டாற்றுவாருக்கென வழங்கப்படும் சிலுவைச்சின்னத்தை இவருக்குச் சன்மானிக்கலாயினர்.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press. Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, October 20 1949.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org